897

தொகுதி 5.] 1926வ௵ அக்டோபர்மீ 1உ [பகுதி 9.

மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி குப்புசாமி முதலியார்

15 NOV

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

15 NOV 1926 MADRAS

உத்தமநாதன்:—இரண்டா? உன் தமையன் இதனாலுண்டான மன வியாகூலத்தால் மடிந்தான் என்றல்லவோ கேள்விப்பட்டேன்.

கர்னல்:—ஆயினும் காரணம் இச் செய்கைதானே.

உத்தம:—சுட் - அவன் நெஞ்சு பல மற்றவன் - இச்சங்கதி - வாதப்பன் ... சங்கதி ... நான் கூறியபடி முடிந்தது பார்த்தாயா.

கர்னல்:—நீ யவனைக் கொன்றது அனுவசியம் தானே?

உத்தம:—சே சே. நீ வரும்போது எதற்கும் ஆயத்தமாயிருக்க வேண்டுமென்றே நான் ஆயுதத்தோடிருந்தேன். அது துப்பாக்கிபோல் சந்தடி யுண்டாகாத ஆயுதம். நான் உடனே யவனை முடித்துவிட் டிராவிட்டால் அவன் கூச்சலிட்டு நம்மைப் பிடித்துக் கொடுத்துவிட்டிருப்பான். நான்செய்த வேலையை மறக்கத்தகுதியான எற்பாடும் செய்துவிட்டேன். வண்டித் தொடர் அங்கு சாளரத்தின் கீழ் நிற்பது மிக்க அநுகூலமாய் விட்டது. அதோடு இந்தகளவே அவன்மேல் வீழ்ந்து விட்டது. அவன் மறுத்துக் கூற முடியாத விடத்திற்குப் போய்விட்டான். சரி கடிதத்தை எடுப்பது தானே.

கர்னல்:—ஏ! ... அவனை நீ கொன்... அந்தப்பயனை நீ யனுபவிப்பாய் - நான் செய்ததன் பலன் முன்னமே தொடங்கிவிட்டது. முன்னே பணத்தை யெடுத்துவை.

அதன்மேல் உத்தமநாதன் குனிந்து பெட்டியைத் திறக்கத்தொடங்கினன். ... நின்று ஒரு துவார வழியாய் யாவும் பார்த்துக்கொண் டிருந்த ஆனந்தலிங்கும் விசுவநாதனும், உத்தமநாதன் குனிந்து சாவியைப் பெட்டியில் நுழைத்துத் திருப்பும் சமயம் ஒரே பாய்ச்சலாய்ப்

ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008 186508

பாய்ந்து வந்து அவனைப் பிடித்தழுத்திக் கொண்டார்கள். அவன் திடுக்கிட்டுச் சமாளிப்பதற்குள் ஆனந்தஸிங் அவன் காங்களில் விலங்கை மாட்டிவிட்டான்.

இங்கு நேர்ந்த சந்தடியையும் அதே சமயம் உத்தமநாதன் அலறிக்கூவி கர்னல் வேலாயுதனைச் சபித்ததையும் கேட்ட இலக்ஷ்மணஸிங்கும் மோகனஸிங்கும் துரிதமாய் அங்கு வந்தார்கள். உத்தமநாதன் அப்போதே வேலாயுதன் தன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டான் என்பதையறிந்து பெருமூச்சுவிட்டுக்கொண்டு நின்றான். இலக்ஷ்மணஸிங் உத்தமநாதனை நோக்கி, "கொட்டூர் வாதப்பனைக் கொலைசெய்த குற்றத்திற்காக அரசன் பெயரால் உன்னைக் கைதுசெய்கிறேன். அதோடு கர்னல் வேலாயுதனுக்கு உடந்தையாகவிருந்து துரைத்தன பத்திரங்களைக் களவாடிய குற்றமும் இருக்கிறது" என்று கூறிவிட்டுப் பிறகு கர்னல் வேலாயுதனை நோக்கி "உன்னைச் சிறைசெய்யும் காரணம் உனக்குத் தெரிந்தேயிருக்கிறது" என்றான்.

உத்தமநாதன் பெட்டியைச் சோதனை செய்தபோது அதில் வேலாயுதன் கேட்ட தொகையும், களவுபோன மூன்று படங்களும், வாதப்பன் கொல்லப்பட்ட தண்டாயுதம் போன்ற கருவியும் இருந்தன. இப்போது உத்தமநாதன் தன்வரையில் குற்றத்தை யொப்புக்கொள்ளா விட்டாலும் போதுமான ருசு வென்னமோ விருக்கிறது.

மறுநாள் நாடெங்கும் இந்த விஷயமே பெரும் பேச்சாய் விட்டது. கொட்டூர் வாதப்பனுடைய காதலியாகிய வேதநாயகியும் அவன் தாயாரும் ஆனந்தஸிங்கிடம் வந்து தங்கள் நன்றியை வெளியிட்டார்கள். விசாரணை நடந்த தினம் நீதிச் சபையில் ஏராளமான ஜனங்கள் கூட்டம் கூடிவிட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் இலக்ஷ்மணஸிங் குற்றத்தை ருசுப்

படுத்தத் தொடங்கி ஆனந்தஸிங் விசுவாநாதம்பிள்ளை இரண்டாவது குற்றவாளியாகிய கர்னல் வேலாயுதன் மூவரைக் கொண்டேயாவும் ருசுப்படுத்திவிட்டான். ஆயினும் இதைக் கண்டு பிடித்த கௌரவம் ஆனந்தஸிங்குக்கே சேர்ந்தது. உத்தம நாதனுக்கு தீபாந்தரவாச தண்டனை விதிக்கப்பட்டது. கர்னல் வேலாயுதனுக்கு ஏழுவருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் அவன் இரண்டாம் வருடமே சிறைச்சாலையில் மரித்தான்.

மோகன்ஸிங் தன் சகோதரனிடம் கூறியபடி துரைத்தனத்தார் ஆனந்தஸிங்குக்குப் பட்டமளிக்க விரும்பியும் அவன் அதை யங்கீகரிக்காது மரியாதையாய் மறுத்து விட்டுத் தன் கஷ்டத்திற்குத்தக்க கூலியை மட்டுமே பெற்றுக் கொண்டான். அதனால் அவன் கீர்த்தி பதின் மடங்காய்ப் பிரகாசித்தது.

கற்பகம் மறைந்த மர்மம்.

1-வது அததியாயம்

ஒரு நாள் காலை சுமார் பத்துமணி யிருக்கும். ஆனந்தஸிங் சொட்டிக்கிடங்கு வீதியில் தன் வீட்டின் அறையில் உட்கார்ந்துகொண் டிருக்கிறான். அச்சமயம் விசுவநாதன் வந்தான். அவன் வந்து நாற்காலியில் உட்கார்ந்ததும் ஆனந்தஸிங் அவனை ஏறவிறங்க நோக்கிக் கடைசியில் அவன் பூட்சை யுற்றுநோக்கினான். பிறகு அவனை நோக்கி, "ஓ! துர்க்கிப்பூட்ஸ்" என்றான்.

விசுவ:—இல்லை இல்லை. நமது நாட்டு பூட்ஸே.

ஆனந்த:—ஓகோ அப்படியாயின் துர்க்கிஸ்நான கட்டம். ஆம் துர்க்கிஸ்நானம். ஏனோ? சுலபசெலவில் நமது நாட்டு ஆசாரப்படி செய்துகொள்வதை விட்டுப்

பெருஞ் செலவுசெய்து தூர்க்கிஸ்நானத்திற்குச் செல்ல வேண்டும்?

விசுவ:—ஏனெனில் கொஞ்சகாலமாய் எனக்குக் கைகால் பிடிப்பாக விருக்கிறது. அதோடு பலகினம்-ஔஷதத்தைக்காட்டிலும் இத்தூர்க்கிஸ்நானம் சுகமளிக்குமென்பது இப்போது நம்பிக்கையான வழக்கமாய் விட்டது. ஆயினும் என் பூட்ஸைப் பார்த்ததாலேயே நீ எப்படி யதை யூகித்துக்கொண்டாய் என்பதை மட்டும் சற்று விளக்கவேண்டும்.

ஆனந்த:—"இதைப்பற்றி யாலோசனை செய்யும் வழி தெளிவாயிருக்கிறது. இப்போது நீ யேறிவந்த வண்டியில் இன்னொருவர் கூட வந்தனர் என்று எப்படி யறிந்து கொண்டேனோ அதைப்போலவே யிதுவும் சுலபமாக ஊகித்துக்கொள்ளக் கூடியதே" என்றான்.

இதைக்கேட்ட விஸ்வநாதன் மிக்க வியப்படைந்து "இதை யெப்படி யூகித்துக்கொண்டாய்?" என்றான்.

ஆனந்தஸிங்:—பேஷ் விசுவநாதன்! நல்ல கேள்வி. இதிலிருக்கிற விஷயங்களைக் கவனிப்போம். நீ வண்டியில் உட்கார்ந்து வரும்போது உன் இடதுபக்கச் சட்டையின் கையிலும் புயத்திலும் சேறு வீசப்பட்டிருக்கிறது. நீ வண்டியின் ஓரத்தில், இடது பக்க ஓரத்தில் உட்கார்ந்திருந்தால்தான் அவ்வாறு படும். நீயவ்வாறு உட்காரவேண்டிய காரணம் என்னவெனில் உன்கூட ஒரு ஆள் இருந்தபடியால்தான்.

விசுவநாதன்:—இது எனக்குத் தெளிவாய் விளங்குகின்றது. ஆயினும் பூட்சும் தூர்க்கிஸ்நானமும் எப்படி நீ யூகித்துக் கொண்டா யென்பது எனக்கு விளங்கவில்லை.

ஆனந்தஸிங்:—இது அவ்வளவு பிரமாதமல்ல. நீ ஒரு

போதும் உன் பூட்ஸை யிம்மாதிரி கட்டுவதில்லை. இம்மாதிரி பூட்சைக் கட்டுவது பூட்ஸ்தைப்போர்கள் அல்லது ஸ்நானகட்டத்தி லிருப்போர்களே. உன் பூட்ஸ் புதிது ஆயைால் இதற்குள் நீ வார் பழுதடைந்துதைப் போரிடம் செல்ல வேண்டிய காரணமில்லை. ஆகையால் ஸ்நானகட்டத்திலேயே யிது நடந்திருக்க வேண்டும். ஆனால் இப்போது நாணயமான எவரும் துர்க்கி ஸ்நானகட்டத்திற்கே செல்கிறார்கள். ஆகையால் அதையே கூறினேன். இதிருக்கட்டும். இன்னொரு விஷயம்.

விசுவ:—இது தெரிந்து விட்டது. இன்னொரு விஷயமென்ன?

ஆனந்த:—கற்பகம் சீமாட்டிக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்குமென்று நான் அஞ்சுகிறேன்.

ஆனந்தஸிங் தன் சங்கதியைப்பற்றிய விவகாரத்தை விட்டு விட்டு ஏதோ பிரத்தியேக விஷயத்தை யாரம்பித்ததற்காக விசுவநாதம் சந்தோஷமடைந்தான். ஆனந்தஸிங் அதைப்பற்றிக் கூறத் தொடங்கி,

"கற்பகம் சீமாட்டி இரத்னசிங்கம் பிரபுவின் சந்ததியில் கடைசியாக இருப்பவள். அந்தப் பிரபுவின் பூஸ்திதிகளெல்லாம் ஆண் சந்ததிகளுக்கே சேரவேண்டும். அவளுக்கு ஜீவனத்திற்குப் போதுமான ஆஸ்திமட்டுமே வைக்கப்பட்டது. ஆனால் அவளிடம் பிரசித்தி பெற்ற சில நகைகளும் இரத்தினங்களு மிருந்தன. அவளுக்கு அவற்றின் மேல் மிக்க அன்பு. அதனால் அவற்றை யவள் எங்கு சென்றாலும் தன் கூடவே வைத்துக்கொண்டிருப்பது வழக்கம். தன் பாங்கிக்காரரிடம் கூட நம்பி அவற்றையவள் விடுவதில்லை. அவள் நடுவயதும் மிக்க அழகு முடையவள்." என்றான்.

விசுவ:—"அத்தகைய மாதுக்கு என்ன ஆபத்து நேர்ந்தது?" என்றான்.

ஆனந்த:—ஆ! கற்பகம் சீமாட்டிக்கு என்ன ஆபத்து நேர்ந்தது என்று கேட்கிறாய்? அவள் உயிரோடிருக்கிறாளா மரித்தாளா என்பது தெரியவில்லை. இதுதான் நாம் கண்டறிய வேண்டிய விஷயம். அவள் ஒழுங்கும் திட்டமுமான பழக்கங்களையுடையவள். அவள் கடந்த நான்கு வருஷங்களாகத் தங்கம்மாள் என்பவளுக்கு இரண்டுவாரங்களுக் கொருமுறை தவிராது கடிதம் அனுப்பிக் கொண்டிருப்பது வழக்கம். தங்கம்மாள் கற்பகம் சீமாட்டியின் செவிலித்தாயா யிருந்தவள். தான் எங்கிருந்தாலும் அம்மாதுக்கு மட்டும் கடிதம் எழுதுவதில் தப்புவதில்லை. தங்கம்மாள் கம்பத்தூரில் வசிப்பவள். இம்மாதுதான் என்னிடம் வந்து ஆலோசனை கேட்டவள். ஐந்து வாரங்களாயின; ஒரு சங்கதி கூட வரவில்லையாம். கடைசியாக வந்த கடிதம் இலவனூரிலிருக்கும் தேசிய போசனசாலையிலிருந்துவந்தது. கற்பகம் சீமாட்டி அங்கிருந்து சென்றவள் ஒருவிலாசமும் கொடுக்காமலே போய்விட்டாள். அவள் குடும்பத்தார் மிக்க கவலையோடிருக்கிறார்கள். திரண்ட செல்வ மிருப்பதால் அவளைப் பற்றிய விஷயத்தைக் கண்டு பிடிக்க எவ்வளவு பணம் செலவு செய்வதாயினும் அவர்களுக்கு ஒரு இலட்சியமல்ல.

விசுவ:—கற்பகம் தங்கம்மாளுக்கு மட்டுமா கடிதம் வரைந்து கொண்டிருந்தாள்? இன்னும் பலருக்கு எழுதும் வழக்க மிருக்கலாமே.

ஆனந்த:—அவள் கடிதப் போக்கு வைத்துக்கொண்டிருக்கும் இடங்களில் நிச்சயமானது இன்னொன்று இருக்கிறது. அது அவள் பணம் கட்டியிருக்கும் பாங்கியே.

அவள்பணம் வைத்திருப்பது செல்வராஜன் பாங்கியில். நான் அவள் கணக்கைப் பார்த்தேன். கடைசியாகக் கம்பத்தூரிலிருந்தபோது பணம் வாங்கியிருக்கிறாள். அது கொஞ்சம் பெரிய தொகையாதலின் கையில் பணம் இருந்திருக்கும். அது முதல் ஒரு முறையே உண்டி யனுப்பி யிருக்கிறாள்.

விசுவ :—எங்கிருந்து யார் பேருக்கு உண்டி யனுப்பினாள் ?

ஆனந்த :—தெய்வநாயகிக்கு; அது எந்த இடத்தில் எழுதப் பட்டதென்று தெரியவில்லை. அது மேட்டுப் பட்டியில் உலகப்பன் வர்த்தகசாலையில் இரண்டு வாரங்களுக்கு முன் மாற்றப்பட்டது. அந்த உண்டி ஐம்பது பவுனுக்கு எழுதப்பட்டது.

விசுவ :—தெய்வநாயகி என்பவள் யார் ?

ஆனந்த :—"அதை விசாரித்து விட்டேன். அவள் கற்பகத்தின் தோழியா யிருந்தவள். அவளுக்கு ஏன் இத்தொகை யனுப்பப் பட்டதென்பது இன்னும் முடிவாய் அறியப்படவில்லை. கூடிய சீக்கிரத்தில் உன் ஆராய்ச்சியால் அது விளங்கிவிடுமென்று நான் ஐய நம்புகிறேன்" என்றான்.

கடைசி வாக்கியத்தைக் கேட்ட விசுவநாதன் சொல்லொணு வியப்படைந்து "என்ன ? என் ஆராய்ச்சியாலா ?" என்றான்.

ஆனந்த :—"ஆ ! கூற மறந்துவிட்டேன். நீ சுகத்தாழ்வா யிருக்கிற தென்று கூறினையல்லவா. அதற்கு இடம் மாறுதல் மிக்க நல்லது. கொஞ்சகாலம் இலவனூருக்குச் சென்றிருந்தால் நல்ல சௌக்கிய முண்டாம். முதல் வகுப்பு வண்டி, செலவுக்குத் தாராளமான பணம், என் ஆலோசனை எப்போது வேண்டுமாயினும் தந்தி மூலமாய் இரவாயினும் பகலாயினும் பெறலாம்.

நான் இச்சமயம் இதை விட்டுக் கிளம்பலாகாது. ஒரு கிழவன் எங்கோமும் தன் பிராணனுக்குப் பயந்து கொண்டிருக்கிறான். அதோடு இச்சமயம் நான் இரத்ன புரியைவிட்டு வெளிச் செல்வதாயின் துரைத்தனத் துப்பறியும் இலாகாவிற்கு வலது புயம் போய்விட்ட மாதிரியாகும். அது மட்டுமல்ல; கள்ளப்பயல்களுக் குள் கிளர்ச்சியும் எச்சரிக்கையும் உண்டாய்விடும். ஆகையால் இச்சமயம் நீ செல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் எந்த விநாடியும் ஆயத் தமா யிருப்பேன்" என்றான்.

விசுவநாதன் மிக்க உற்சாகத்தோடு "பேஷ்! சந்தோஷ மாய்ச் செல்கிறேன்" என்றான்.

இரண்டாவது நாள் விசுவநாதன் இலவனூர் தேசிய போஜனசாலை என்றஹோட்டலில் போய் இறங்கினான். அந்த ஹோட்டல் காரியஸ்தன் அவனை மிக்க மரியாதை யோடும் அன்போடும் வரவேற்றுபசரித்தான். அத்தகைய குணத்தில் அவன் பிரசித்தி பெற்றவன். காலைப் போசன மருந்திய பின் விசுவநாதன் காரியஸ்தனிடம் சம்பாஷிக்கத் தொடங்கி மெதுவாய்க் கற்பகம் சீமாட்டியைப்பற்றி விசா ரித்தான். காரியஸ்தன் அச்சீமாட்டிக்கு வயது நாற்பதுக் குள்ளிருக்குமென்றும், ஆனால் மிக்க கம்பீரமான வனப் புடையவளென்றும், அந்த ஹோட்டலில் இரண்டு மூன்று மாதங்கள் தங்கி யிருந்ததாகவும், எல்லாராலும் மிகவும் விரும்பப்பட்டா ளென்றும் கூறினான்.

விசுவ:—"அவளிடம் விலைமதிக்கத்தக்க நகைகள் இரத்தி னங்கள் முதலியவைக ளிருந்ததாகப் பிரஸ்தாபம்" என்றான்.

காரியஸ்தன்:—அதைப்பற்றி எனக்கு அவ்வளவாய்த் தெரியாது. ஆனால் அவள் படுக்கையறையிலேயே

வைத்துக்கொண்டிருந்த ஒரு பெட்டி மிகவும் ஜாக்கிரதையாய் சதா பூட்டப்பட்டிருந்த தென்று வேலைக்காரர் கூறுகிறார்கள்.

விசுவ:—அச்சீமாட்டியோ டிருந்த தோழி எப்படிப்பட்டவளோ?

காரியஸ்தன்:—தோழியாகிய தெய்வநாயகி என்பவளும் தன் எஜமானியைப் போலவே யாவரும் தன்னிடம் விசுவாசமா யிருக்குமாறே நடந்துகொண் டிருந்தாள்.

விசுவநாதன் இன்னும் விசாரித்ததில் தெய்வநாயகி யென்னும் தோழி அந்தஹோட்டலில் இருந்த வேலைக்காரர்களின் மேஸ்திரியை மணம் புரிந்துகொள்ள ஏற்பாடு செய்திருந்ததாகத் தெரிந்தது. அவள் விலாசம் "மேட்டுப்பட்டி, தச்சன் வீதி 11-வது இலக்க வீடு" என்றும் தெரிந்தது. ஆனந்தலிங்கூட இவ்வளவு சாமார்த்தியமாய்ச் சங்கதிகளை யறிந்து கொள்ளமாட்டான் என்று விசுவநாதன் தனக்குள் சந்தோஷமடைந்தான்.

கற்பகச் சீமாட்டி திடீலென்று அந்த ஹோட்டலை விட்டு ஏன் சென்றாள் என்பது மட்டும் சீக்கிரத்தில் ஜகதீசனுக்குப் புலப்படவில்லை. ஆனால் அச்சீமாட்டி ஹோட்டல்காரனுக்கு ஒரு நாளே முன்னாடி யெச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றாள். அதனால் அவள் ஒரு வார வாடகை வீணாய் அதிகமாகக் கொடுக்கவேண்டி யிருந்தது. அச்சீமாட்டி ஏன் அப்படிச் செல்லவேண்டு மென்பதற்குக் காரணம் அவள் தோழியாகிய தெதய்வநாயகியின் காதலனான சுப்பராயன் என்பவன் கூறிய உத்தேசத்தாலேயே சற்று விளங்கியது.

விசுவநாதன் சுப்பராயனை நோக்கி அதைப்பற்றிக் கேட்டான். சுப்பராயன் "அய்யா! அந்தச்சீமாட்டி இந்த ஹோட்டலை விட்டுச்செல்ல இரண்டு நாட்களுக்கு முன் ஒரு

மனிதன் அந்தம்மாளை வந்து கண்டான். அவன் பார்வைக்கு நாகரிக மற்ற சுத்தக் காட்டுமிராண்டிபோலும், நாட்டில் உள்ள மூடர்களில் ஒருவன் போலும், சுத்த நாணயமற்றவனுகவும் காணப்பட்டான். அவன் இந்த ஊரில் எங்கோ தங்கியிருந்தான். அவன் ஏரிக்கரையில் இச்சீமாட்டியோடு அக்கரையாய்ப் பேசிக்கொண் டிருந்தபோது இரண்டொருவர் பார்த்திருக்கிறார்கள். அதன்பிறகுதான் அவன் ஹோட்டலில் அச்சீமாட்டியைக் காண வந்தான். சீமாட்டி அவனைப் பார்க்கமுடியாதென்று கூறிவிட்டாள். அப்படிச் சொன்னவுடனேதான் சீமாட்டி போய் விட்டாள். அவன் உங்கள் நாட்டானே. ஆனுல் அவன் பெயர் என்னவென்று தெரியவில்லை" என்று கூறினுன்.

அவன் காதலியும் கற்பகம் சீமாட்டியின் தோழியுமாகிய தெய்வநாயகியோ அம்மனிதன் வந்ததே சீமாட்டி சென்றதற்குக் காரணம் என்று கூறினதாகத் தெரிந்தது. அதோடு ஒரு சங்கதிமட்டும் சுப்பாாயன் கூற முடியவில்லை. அதாவது தெய்வநாயகி இப்போதேன் அச்சீமாட்டியை விட்டு விட்டுச்சென்றுள் என்பதே. அதைப்பற்றிய விஷயம் அவனுக்குத் தெரியாதோ அல்லது அவன் கூறப் பிரியப்பட வில்லையோ தெரியவில்லை. அதைப்பற்றி யறிய வேண்டுமாயின் விசுவநாதன் தெய்வநாயகி வசிக்கும் மேட்டுப்பட்டிக்குச்சென்று அவளைத்தான் கேட்கவேண்டும்.

விசுவநாதன் இனியங்கிருப்பதில் பயனில்லை. கற்பகச் சீமாட்டியின் விஷயத்தை யறிய வேண்டுமாயின் அவள் அங்கிருந்து எங்கு சென்றுளென்றறிந்து அந்த இடதிற்குச் செல்ல வேண்டும். அந்த விஷயம் பகிரங்கமாய்த்தெரியவில்லை இதனுல் அவள், தான் செல்லுமிடம் ஒருவருக்கும் தெரியலாகாதென்று சிரத்தை யெடுத்துக்கொண்டதாகத்தெரிகிறது. அப்படிஇல்லாவிட்டால் அவள் தன் சாமான்களின்

JL
894.1,N22m
N24:57

மேல் பகிரங்கமாய்த் தான் செல்லும் இடத்தின்பெயர் எழுதிய சீட்டுகளை வழக்கப்படி யொட்டியிருக்கலாம். ஆயினும் அங்கிருந்த பிரயாணிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுக்கும் ஒரு வர்த்தசங்கத்தார் காரியாலயத்திலிருக்கும் ஒரு இலிகிதன் மூலமாக அச்சீமாட்டி சுற்று வழிகளின் மூலமாய்ப் பட்டூருக்குச் சென்றாள் என்று தெரிந்தது. அதன்மேல் விசுவநாதன் இதுகாறும் தான் கண்டறிந்த சங்கதிகளை யெல்லாம் ஆனந்தஸிங்குக்கு அறிவித்துவிட்டு அங்கிருந்து பட்டூருக்குப் புறப்பட்டான்.

பட்டூரில் விசாரித்ததில் கற்பகம் அங்குள்ள பிரதம ஹோட்டலில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்தாளென்றும், அங்கிருக்கையில் சேஷப்பன் என்ற ஒரு குருவின் குடும்பத்தோடு சிநேகமானாளென்றும் தெரிந்தது. குருவும் அவர் மனைவியும் தென் நாட்டிலிருந்து அங்கு வந்திருந்தார்கள். அவர்களுடைய மத சம்பந்தமான விஷயங்களில் அவளுக்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டது. மேலும் அக்குரு கம்பீரமான தோற்றமும் சம்பாஷணையும் வசீகரமுமுடையவர். அவர் தென்னாட்டுச் சுரத்தால் பீடிக்கப்பட்டிருந்தார். அவர் மனைவி அவருக்கு உபசாரம் செய்துகொண்டிருந்தாள். இவையாவும் கற்பகத்திற்கு அவர்களிடம் அன்பையும் அபிமானத்தையுமுண்டாக்கின. அவள் குருவின் மனைவிக்குத் தன்னாலான உதவிகளைச் செய்துகொண்டிருந்தாள். குருவுக்குக் கொஞ்ச நாட்களில் தேகம் சுகமடைந்தது. அதன்பின் அவரும் அவர் மனைவியும் அங்கிருந்து இரத்தின புரிக்குப் புறப்பட்டபோது கற்பகமும் கூடவே சென்றாள். இச்சங்கதிகள் நடந்து மூன்று வாரங்களாயின வென்றும் பிறகு அவர்களைப்பற்றி, தான் ஒன்றும் கேள்விப்படவில்லை யென்றும் அந்த ஹோட்டல் மானேஜர் விசுவநாதனிடம் கூறினான்.

186583

விசுவ :—"அச்சீமாட்டியோடு கூடவிருந்த தெய்வநாயகி என்ற தோழி என்னவானுள்?" என்று கேட்டான்.

மானேஜர்:—"தெய்வநாயகி குருமுதலியவர்கள் புறப்படுவதற்கு நான்கைந்து தினங்களுக்கு முன்பே போய் விட்டாள். போகும்போது தான் அடியோடு சீமாட்டியை விட்டுப் பிரிந்து விட்டதாகக் கண்ணீர் விட்டுக் கொண்டே மற்ற வேலைக்காரர்களிடம் கூறினுள். அவர்களெல்லாம் செல்லுமுன் குருவே மொத்தம் செலவையும் கணக்குப்படி கொடுத்து விட்டார். இன்னெரு விஷயம் கூறவிரும்புகிறேன். அதாவது அச் சீமாட்டியைப்பற்றி இங்கு வந்து விசாரித்தது தாங்கள் மட்டுமல்ல. சுமார் ஒரு வாரத்திற்கு முன்புதான் ஒரு மனிதன் வந்து அச்சீமாட்டியைப் பற்றி விசாரித்தான்" என்ருன்.

விசுவ:—அவன் ஏதேனும் பெயர் கூறினுனே?

ஹோட்டல் மானேஜர்:—இல்லை யில்லை. அவன் உங்கள் ஊரானே. ஆனுல் ஒரு அபூர்வமான மனிதன்.

விசுவ:—அநாகரீகமான முரடன் அல்லவா?

மானேஜர்:—சந்தேகமின்றி - அநாகரீகமும் முரட்டுத்தனமும் நாணய மின்மையும் பூரணமாய் அவனிடம் காணலாம். காடியைப் போல் தாடி வைத்துக்கொண்டு பருமனுய்த் தடியுன்போலிருந்தான். அவன் காட்டு மனிதரோடு வசிக்கத்தக்கவனே யன்றி இத்தகைய நாகரீகமான ஹோட்டலில் அடியெடுத்து வைக்கவும் அருகனல்ல. கோரமான பார்வையும் இரக்கமற்ற பயங்கா சொரூபமு முடையவன்.

இவைகளைக் கேட்டதே விசுவநாதனுக்குக் கொஞ்சம் மர்மம் விளங்குவது போல் தோன்றியது. "நாணயமான அச்சீமாட்டியை இக்குரூரமான முரட்டு மனிதன் ஏதோ

ஒரு காரணமாய்த் தொடர்ந்து கொண்டிருக்கிறுன். அவள் எங்கு சென்றாலும் ; அவன் விடுபவனுகத் தோன்றவில்லை. அச்சிமாட்டி என்ன காரணத்திற்காகவோ அவனுக்கு அதிக மாய்ப் பயப்படுகிறுள். அதனுற்றுன் இலவனூரிலிருந்து திடீலென்று ஓடிவிட்டாள். அவள் அங்கிருந்து பட்டுருக் குச்சென்ற சங்கதியை யவன் எப்படியோ அறிந்துகொண்டு தான் அவ்விடத்திற்கும் வந்திருக்கிறுன். எப்படியாயினும் அவளிருக்குமிடத்தை யவன் கண்டுபிடித்து விடலாகும் இப்போது இரத்னபுரிக்குச் சென்று அவளைக் கண்டு பிடித்து விட்டானே. அதனுற்றுன் அவள் இதுகாறும் யாருக்கும் ஒரு சங்கதியும் அறிவிக்க முடியாமலிருக்கிறு ளோ! அவளோடு கூட இருக்கிற குருவும் அவர் மனேவியும் நல்லவர்களென்று கூறப்படுகிறுர்களே. அவர்கள் அச் சிமாட்டியைப் பாதுகாக்க மாட்டார்களா? அம்முரடன் அச் சிமாட்டியைப் பின் தொடர்வதில் என்ன விபரீத மர்மம் அடங்கி யிருக்கிறதோ! இதையே நான் கண்டுபிடிக்க வேண் டும்" என்று விசுவநாதன் நெடுநேரம் தனக்குள் ஆலோசனே செய்து கடைசியில் யாவும் விவரமாய் ஆனந்தஸிங்குக்கு அறிவித்தான். ஆனந்தஸிங் பதில் அனுப்பிய கடிதத்தில் சேஷப்பன் என்ற குருவின் இடது செவி எவ்வாறிருக்கி றது என்பதைப்பற்றி விவரமாய்த் தெரிவிக்குமாறு கேட் டிருந்தான். ஆனந்தஸிங் ஒவ்வொரு சமயங்களில் கேலி யான கேள்விகளைக் கேட்பதுண்டு. இப்போதும் அவ்வாறே கேட்டிருக்கிறுன் என்று கருதி விசுவநாதன் அக்கேள்வியை அசட்டை செய்துவிட்டான். ஆனந்தஸிங்கின் விடை வரும்போது விசுவநாதன் தெய்வநாயகியைக் கண்டு விசா ரிப்பதற்காக மேட்டுப்பட்டி போய்ச் சேர்ந்திருந்தான்.

விசுவநாதன் சுலபமாகவே தெய்வநாயகி யிருக்கு மிடத்தைக் கண்டு பிடித்துவிட்டான். அவள் தன் எஜ

மானியிடம் மிக்க அன்பு கொண்டிருந்தவள். எஜமானி இப்போது நல்ல மனிதர்களிட மிருப்பதாலும் தான் மணம் செய்து கொள்ளப்போவதாலுமே அவள் பிரிந்துவிட வேண்டியது அவசியமாயிற்று. பட்டூரிலிருந்தபோது சீமாட்டி தன்னிடம் என்ன காரணத்தாலோ சிடுசிடுப்பாகவும் கோபமாகவும் நடந்துகொண்டா ளென்று மிக்க வியாகுலத்தோடு கூறினள். அதோடு ஒருமுறை என் யோக்கியதையில் நீ சந்தேகங் கொண்டிருக்கிறுயா என்று தன்னைக் கேட்டதாகவும் அதுவே தங்கள் பிரிவினையைச் சுலபமாக்கி விட்டதென்றும் அவள் கூறினள். சீமாட்டி அவளுக்கு ஐம்பது பவுனுக்கு உண்டி கொடுத்தது அவள் கலியாணத்திற்குப் பரிசாகவே. விசுவநாதனுக்கு அந்தப் புது முரட்டு மனிதன் விஷயத்தில் எவ்வாறு சந்தேகமும் பீதியும் உண்டாகி யிருந்ததே அவ்வாறே தெய்வநாயகிக்கும் அவன் விஷயத்திலிருந்தது. அவனுக்குப் பயந்துகொண்டே தன் எஜமானி இலவனூரைவிட்டு ஓடிவிட்டாளென்றே அவளுக்கும் புலப்பட்டிருந்தது. இலவனூர் ஏரியோரத்தில் சீமாட்டி யுலவிக்கொண்டிருக்கையில் அவளைச் சந்தித்த அம்மனிதன் முரட்டுத் தனமாய் அவள் கரத்தைப் பற்றியதை நான் நேரில் கண்டேன் என்றும், சீமாட்டி தன்னிடம் அதைப்பற்றி ஒருபோதும் சம்பாஷிக்கவில்லையென்றும், ஆனுல் அவள் எந்நேரமும் மனக்கலக்கத்தோடும் அச்சத்தோடும் இருந்தாளென்றும், அவனுக்குப் பயந்தே இலவனூரைவிட்டுப் போய்விட்டாளென்றும் அவள் கூறினுள். அவ்வாறு கூறிக்கொண்டே யிருந்தவள் திடீலென்று அலறியெழுந்து, "அதோ அதோ! அதே பயங்கரமான உருவம்" என்று வீதியைச் சுட்டிக்காட்டினுள்.

விசுவநாதன் சாளரத்தின் வழியாக வீதிவழியை நோக்கினபோது ஒருதடித்த மனிதன் மெதுவாய் நடந்து

கொண்டு வீடுகளின் இலக்கங்களைக் கவனித்துக்கொண் டிருந்தான். அவன் தாடி உருவம் யாவற்றாலும் அவனே கற்பகச் சீமாட்டியைப் பின்பற்றிய மனிதன் என்று விசுவ நாதன் உணர்ந்தான். அச்சமயம் அவன் மனம் தூண்டிய படியே அவன் சட்டென்றெழுந்துபோய் அம்மனிதனைக் கண்டு, "நீ இந்திரபுரிவாசியல்லவா?" என்றான்.

அதற்கு அம்மனிதன் "இருந்தால் அதற்கென்ன? இப்போது என்ன?" என்றான். அதன்மேல் விசுவநாதன் "உன் நாமதேயம் என்னவென்று வெளியிடலாமல்லவா?" என்றான்.

அம்மனிதன் "ஒருகாலும் முடியாது?" என்று தீர் மானமாகக் கூறினான்.

அதன்மேல் விசுவநாதன் "இது இப்படிக் கேட்டால் வெளிவராது; நோய்க்கேட்டே தீரவேண்டும்" என்று கருதி அம்மனிதன் முகத்தை நோக்கி, "கிடக்கிறது கற்ப கச் சீமாட்டி எங்கேயிருக்கிறாள்? கூறு" என்றான்.

அதைக்கேட்டதேயம்மனிதன் விசுவநாதனை முறைத் துப்பார்த்தான். விசுவநாதன், "ஏனையா? அம்மாதை யென்ன செய்தாய்? என் அவளைப் பின்தொடர்ந்து சென் றாய்? நீ கட்டாயம் கூறியே தீரவேண்டும்" என்றான்.

அதைக்கேட்டதே அம்மனிதன் வேங்கைபோல் உறு மிக் கோபத்தோடு விசுவநாதன்மேல் பாய்ந்தான். விசுவ நாதன் பன்முறைகளில் துஷ்டரிடம் சிக்கி, அவர்களை வென் றிருக்கிறான். ஆனால் இம்மனிதன் பிடித்த பிடியினின்றும் தப்பித்துக்கொள்ள அவனால் முடியவில்லை. அம்முரடன் ஒரே பிடியாய் அவன் தொண்டையைப் பிடித்துக்கொண் டான். விசுவநாதன்பாடு திக்குமுக்காடுகிறது. சற்று நேரத் திற்குள் மூச்சு போய்விடும்போ லிருக்கிறது; கண்கள் இருள்கின்றன.

அச்சமயம் வீதியின் மறுபுறம் நின்று நடக்கும் சங்கதிகளைக் கவனித்துக்கொண்டிருந்த ஒரு கூலியாள் பாய்ந்து வந்து அம்மூடன் கையின்மேல் தன்னிடமிருந்த கழியால் ஓங்கி ஒரேயடி யடித்தான். மூடன் உடனே விசுவநாதனைப் பிடித்தபிடியை விட்டுவிட்டான். விசுவநாதன் சமாளித்து நிற்பதற்குள் அம்மூடன் எட்டச்சென்று இரண்டொரு விநாடி விசுவநாதனை யுற்று நோக்கிவிட்டு விசுவநாதன் வெளிவந்த வீட்டிற்குள் நுழைந்தான்.

முதலில் அம்மூடனை யங்கு கண்டபோதே இவன் நம்மைப்போலவே பட்டூரிலிருந்து தெய்வநாயகி வசிக்குமிடத்தை யறிந்துகொண்டு அவளை விசாரிக்கவே வந்தானென்று விசுவநாதன் அறிந்துகொண்டான். மூடன் வீட்டிற்குள் சென்றதும் விசுவநாதன் தனக்கு உதவிசெய்த கூலியாளை நோக்கி, "நீ சமயத்தில் எனக்குச் செய்த பேருதவிக்காக மிக்க நன்றி பாராட்டுகிறேன்" என்றான்.

அதற்குக் கூலியாள் "விஸ்வநாதம்! பேஷ் நல்ல சாமார்த்தியமும் புத்திசாலித் தனமுமான வேலை செய்தாய்." என்று கூறவே விசுவநாதன் பிரமித்து விழித்தான். ஏனெனில் கூலியாள் போல் வேடமணிந்து தக்க சமயத்தில் வந்து விசுவநாதனுக்கு உதவி செய்தவன் நமது ஆனந்தஸிங்கே.

ஆனந்தஸிங் இரத்தினபுரியை விட்டு வருவதற்குத் தனக்குச் சந்தர்ப்பம் இல்லை யென்று விசுவநாதனிடம் முன்பு கூறியிருந்தாலும், பிறகு இடையில் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆகவே நாம் விசுவநாதனுக்கு முன் படியிற் செல்லவேண்டு மென்று கருதி, விசுவநாதன் இது காறும் இலவனூரில் காரியங்களை விசாரித்துக் கொண்டு மேட்டுப் பட்டிக்கு வந்திருப்பான் என்ற உத்தேசத்தோடு அங்கு

வந்து தெய்வநாயகியின் வீட்டைக் கண்டறிந்து அதன் எதிரில் காத்திருந்தான்.

ஒரு மணி நேரங்கழித்து ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் அவ்வூரில் விசுவநாதன் தங்கியிருக்கும் ஹோட்டல் அறையில் உட்கார்ந்து சம்பாஷித்தபோதுதான் ஆனந்தஸிங் அந்த விவரங்களைக் கூறினான். அப்போது ஆனந்தஸிங் "நீ இத்தகைய காரியம் செய்வா யென்று நான் கருதவேயில்லை. நீ அந்த மூடனையே கற்பகம் சீமாட்டியின் விரோதியாகக் கருதினாய். அப்படி யிருக்க நீ செய்த காரியம், எதிரிகளை யெச்சரிக்கை செய்து விட்டு நாம் எதைக் கண்டுபிடிக்க முயல்கிறோமோ அதைக் கண்டுபிடிக்காமற் செய்துவிடக்கூடியதே. விசுவநாதம்! இத்தகைய விஷயங்களில் மிகப் பொறுமை யோடும் எச்சரிக்கையோடும் நடந்து கொள்ளவேண்டும். முதலில் விரோதியாய்த் தோன்றுகிறவர்கள் ஆராய்ச்சியில் நண்பர்களாகவும், நல்லவர்களாகத் தோன்றுகிறவர்கள் கொடிய துஷ்டரான விரோதிகளாகவும் தெரியவரும். நாம் இதைப்பற்றி யாராய்ச்சி செய்கிறோ மென்பதே அவர்களுக்குத் தெரியலாகாது. விவகாரம் வெளிக்குப் புலப்படுகிற போது நீ பேசாமல் அவன் இருப்பிடத்தை யறிந்துக் கொண்டு அவன் நடக்கைகளைக் கவனித்திருக்க வேண்டும். ஆயினும் தற்காலமாய் இவ்விஷயத்தில் உன் தவறான நடக்கையால் இடையூறு நேராது." என்றான்.

விசுவ: —"எதனால் ?" என்றான்.

ஆனந்த:—அவ் விஷயம் சீக்கிரம் விளங்கிவிடும். நீ இரவு வண்டிக்கு என்னோடு இரத்தினபுரிக்கு வரவேண்டியது.

விசுவ:—"இருக்கட்டும்; இச்சந்தர்ப்பத்தில் நீயாயிருந்தால் இதை விட மேலானமாதிரி நடந்துகொண் டிருப்பாயோ ?" என்றான்.

ஆனந்தஸிங் புன்னகையோடு "ஒருசமயம் இருக்கலாம். இப்போது கொஞ்சம் மேலாகவே நடந்து கொண்டிருக்கி றேன். இதோ கனம் பச்சைப்பிள்ளை வருகிறார். இவர் இதே ஹோட்டலில் உன்னோடு வசிப்பவர். அவர் மூலமாக இவ்விஷயத்தில் நாம் இனி எப்படி நடந்து கொள்ள வேண் டிய தென்பதை யறியலாகும்." என்றான்.

ஏனெனில் அச்சமயம் ஹோட்டல் வேலைக்காரன் ஒரு தட்டில் ஒரு பெயர் எழுதிய சீட்டைக் கொண்டு வந்து கொடுத்தான். அதைப்பார்த்தே ஆனந்தஸிங் அவ்வாறு கூறினான். அச் சீட்டை ஆனந்தஸிங் விசுவநாதனிட மளித் தான். விசுவநாதன் அதை வாசித்து முடிந்ததும் அச் சீட்டில் குறிக்கப்பட்ட மனிதன் உள்ளே வந்தான்.

அவனைக்கண்டதும் விசுவநாதன் மிக்க வியப்பும் கலக் கமுமடைந்து ஆனந்தஸிங் முகத்தை நோக்கினான். ஏனெ னில் அம்மனிதன் தான் சற்று நேரத்திற்குமுன் சச்சரவிட்ட அம்முரட்டு மனிதனே. அம்மனிதன் விசுவநாதனை யங்கு கண்டதே "ஆனந்தஸிங்! இதென்ன விவகாரம்? உன் கடி தத்தைக் கண்டு நான் இங்கு வந்தேன். இந்த ஆளுக்கு இதில் என்ன சம்பந்தம்?" என்றான்.

ஆனந்த:—"இவர் என் அன்பார்ந்த நண்பரும், இவ்விஷயத் தில் எனக்கு உதவி செய்பவருமாகிய டாக்டர் விசுவ நாதர்" என்றான்.

இதைக் கேட்டதே கனம் பச்சைப் பிள்ளை யென்ற அம்மனிதன் விசுவநாதன் கரங்களைப்பற்றிக் கொண்டு "நண் பரே! என்னை மன்னிக்க வேண்டும். இந்த விஷயத்தால் நான் வெறி கொண்டவன் போல் நடந்து கொள்கிறேன். என் மனமிருந்த நிலைமையில் என் கோபத்தை யடக்க முடி யாமற் போயிற்று. என் நரம்புகள் துடி துடித்தன. என்னை மன்னிக்க வேண்டும்" என்றான்.

விசுவ:—"நடந்த சம்பவத்தை யிருவருப் மறந்து விடுவோம். இனி நடக்கவேண்டிய விஷயத்தைக் கவனிப்போம்" என்றான்.

2-வது அத்தியாயம்.

கனம் பச்சைப்பிள்ளை ஆனந்தஸிங்கை நோக்கி "ஆனந்தஸிங்! நீ எப்படி யிந்த விஷயத்தில் சம்பந்தப் பட்டாய் என்பது ஒரு பக்கமிருக்கட்டும். முதலாவதாக நான் இன்னும் ஜீவித்திருப்பது உனக்கு எப்படித் தெரிந்தது? இது எனக்கு மிக்க வியப்பாக விருக்கிறது" என்றான்.

ஆனந்த:—கற்பகச் சிமாட்டியின் செவிலித்தாயும் உபாத்தினியுமாக விருந்த தங்கம்மாளிடம் நான் கலந்து பேசுவதுண்டு.

பச்சைப்பிள்ளை.—ஆ! சிகப்புத் தங்கம்மாள்! எனக்கு நன்றாய்க் கவனமிருக்கிறது.

ஆனந்த:—அவள் உன்னை நினைவில் வைத்துக்கொண்டுதானிருக்கிறாள். நீ தென் நாட்டிற்குச் செல்லுமுன் உன்னைக் கண்ட சம்பவங்களை அவள் மறக்கவில்லை எல்லா விஷயங்களும் அவள் நினைவிலிருக்கின்றன.

கனம் பச்சைப்பிள்ளை:—"ஆ! உனக்கு என் சரித்திர முழுமையும் தெரியுமென்று நம்புகிறேன். நான் உன்னிடம் மறைக்கவேண்டியது ஒன்றுமில்லை. ஆகையால் சத்தியமாய் நடந்த சங்கதியைக் கூறுகிறேன். நான் இந்தக் கற்பகம் சிமாட்டியைக் காதலித்ததைப்போல் வேறெவரும் ஒரு மாதைக் காதலித்திருக்க மாட்டார்கள். ஆனால் நான் என் அந்தஸ்திலிருந்த செல்வவந்தர் பிள்ளைகள் எந்த நிலைமையிலிருந்தார்களோ அதே நிலைமையிலிருந்தேன்; அதாவது முரட்டுத்தனமான

நடக்கைகளும் சிற்றின்பச் செய்கைகளும் அப்போது சாதாரண வழக்கமாக விருந்தன.

கற்பகமோ மிக்க கண்டிப்பான நெறியுடையவள். அவளுக்கு என்மேல் பூரணக் காதலிருந்ததென்பது உண்மை. அதை நான் நன்றாக அறிவேன்-ஆனால் எம்மாதிரியோ என் முரட்டுத்தனமான நடக்கைகளை யவள் அறிந்து கொண்டதும், "இனி யுன்னிடம் பேசவே முடியாது" என்று கூறி விட்டாள். ஆயினும் என்மேலிருந்த காதல் மட்டும் நீங்கவில்லை. ஆம். அதனாலேயே யவள் மணம்புரிந்துகொள்ளவேயில்லை. நான் தென்னாட்டிற்குச் சென்றேன். சிலவருடங்கள் கழிந்தன. நான் நற்காலமாக அங்கு நல்ல செல்வம் சம்பாதித்தேன். அதன்மேல் இனிபாவது அவள் மனம் கரையும்படி செய்யலாம், எப்படி யிருக்கிறாளென்றுவது பார்ப்போம் என்று கருதி அங்கிருந்து வந்தேன்.

அவள் இன்னும் மணம் செய்துகொள்ள வில்லை யென்று கேட்டதும் என் மனம் பதைத்தது. அவள் இலவனூரிலிருக்கிறாளென்று கேள்விப்பட்டு அங்குசென்று அவளைக் கண்டேன். அப்போதும் அவள் தேகம் பல வினைப் பட்டதே யன்றி அவள் மனம் என்னமோ பழைய உறுதியை யிழக்கவேயில்லை. இலவனூரில் அவளைச் சந்தித்து என்னால் எவ்வளவு தாழ்மையாய்க் கூறக்கூடுமோ அவ்வளவும் கூறினேன், பயனில்லை. நான் மறு முறை யவளைக் காணச்சென்ற போது அவள் அங்கில்லை. எங்கோ போய்விட்டாள். அதன் பிறகு மிக்க பிரயாசைப்பட்டு அவள் சென்ற ஊரை யறிந்துகொண்டு பட்டூருக்குச் சென்றேன். அங்கு விசாரித்ததில் அவள் சென்றவிடம் தெரியவில்லை. அவள் தோழி யிங்கிருக்கிறாளென்று அறிந்து இங்கு வந்தேன். நான் இயற்கையிலேயே முரட்டுக்குண முடையவன். நான் சென்ற விடத்திலிருந்த சகவாசமும்

அத்தகையதே. ஆகையால் நமது நண்பர் விசுவநாதன் என்னை யத்தகைய கேள்விகள் கேட்டபோது என் முரட்டுத்தன்மையால் அவ்வாறு நடந்துகொண்டேன். அதற்காக நண்பர் என்னை மன்னித்துவிட்டார். இப்போது கற்பகம் எங்கிருக்கிறாள்? தயவு செய்து அதைக் கூறு" என்றான்.

ஆனந்த.—"அதையே நாம் இப்போது கண்டறிய வேண்டும். இரத்னபுரியில் உன் விலாசம் என்ன?" என்றான்.

பச்சைப் பிள்ளை:—"இலிங்கப்பன் ஹோட்டல் என்றால் போதும்" என்றான்.

ஆனந்த:—"சரி, நீ அங்கு சென்று எப்போதும் ஆயத்தமாக விரு. திடீலென்று நான் உன்னை யழைக்கவேண்டியிருக்கும். உனக்கு அதிக நம்பிக்கையை யுண்டாக்கிவிட எனக்குப் பிரியமில்லை. ஆனால் என்னால் கூடுமான முழு சாமார்த்தியத்தையும் உபயோகித்துக் கற்பகம் சீட்மாடியை ஆபத்தினின்றும் காப்பாற்ற முயல்வேன். இச்சமயம் அதற்கு மேல் ஒன்றுங் கூற முடியாது. இதோ இச்சீட்டில் என் விலாசம் இருக்கிறது. எப்போது அவசியமாயினும் நீ என்னைச் சந்திக்கலாம்" என்று கூறிவிட்டு,

விசுவநாதனை நோக்கி "நண்பனே! நீ நம் பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்யவேண்டியதே. நான் முன்னாடி என் காரியஸ்திக்கு ஒரு தந்தி கொடுக்கிறேன்-நாம் காலை ஏழுமணிச் சுமாருக்கு வீட்டிற்குச் செல்லும் போது அவள் சரியான போஜனம் தயார்செய்து வைப்பாள் என்று எதிர்பார்க்கலாம்" என்றான்.

அவ்வாறே யன்றிரவு இரயிலில் ஆனந்தலிங்கும் விசுவநாதனும் புறப்பட்டு மறுநாட் காலைச் சரியாக ஏழரை மணிக்கு இரத்னபுரி போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள்

இரொட்டிக்கிடங்கிலுள்ள தங்கள் வீட்டுக்குச் சென்ற போது, ஆனந்தஸிங்குக்குச் சற்று நேரத்திற்கு முன்புதான் ஒரு தந்தி வந்திருப்பதாய்க் காரியஸ்தி கூறினள்.

ஆனந்தஸிங் அதை வாங்கிப் பார்த்தபோது அவன் முகத்திலுண்டான திருப்தியும் சந்தோஷமுமான பிரகாசத்தைக் கண்ட விசுவநாதன் மிக்க வியப்படைந்து "எங்கிருந்து வந்தது இத்தந்தி? ஏதேனும் விசேஷ மிருக்கிறதோ?" என்றான்.

ஆனந்த:—ஆகா; எல்லா விசேஷங்களும். இது பட்டூரிலிருந்து வருகிறது. உனக்கு எழுதிய கடிதத்தில் அந்த சேஷப்பன் என்கிற குருவின் இடது செவியைப் பற்றிய விவரத்தைத் தெரியப்படுத்தும்படி எழுதியிருந்தேனல்லவா?" என்றான்.

விசுவநாதன் மிக்க வியப்பும் கலவரமுமடைந்து, "ஆம், ஆம். கேலியாக வெழுதினையென்று...." என்பதற்குள்,

ஆனந்த:—"நான் கேலியாகச் சம்பந்தமில்லாத விஷயத்தைப்பற்றி எழுதியதாய் நீ கருதுவாய் என்று எனக்குச் சந்தேகமிருந்தது. அதனுற்றான் நான் அதே சமயத்தில் பட்டூர் ஹோட்டலிலுள்ள மானேஜருக்கும் அதைப்பற்றி யெழுதி யிருந்தேன். அவனனுப்பிய விடையே யிது" என்றான்.

விசுவ:—"இத்தந்தியால் என்ன விஷயம் தெரிகிறது?" என்றான்.

ஆனந்த:—"நண்பனே! இதனல் நாம் இப்போது மிக்க தந்திரமும் அபாயமுமான ஆசாமியோடு போராட வேண்டி யிருக்கிறதென்று தெரிகிறது. சேஷப்பன் என்ற குரு வேறு யாருமல்ல; கிழக்குத் தீவில் பிரசித்தி பெற்ற ஆகாசப்புரட்டன் என்ற பயங்கரமான போக்கிரிப்பயலே. அவன் மிக்க யோக்கியமும் பெருந்

தன்மையு முடைய ஒரு மதகுருவைப் போல் நடித்து தனியான செல்வமுடைய மாதரை மயக்கி ஏமாற்றுவதில் கைதேர்ந்தவன். அதற்குத் தக்க மனைவி யவனுக்குச் சிக்கியிருக்கிறாள். அவள் நமது நாட்டாளே. அவள் பெயர் பாலாம்பாள். நீ குருவென்று எழுதியதாலும் அவர்களைப் பற்றிய மற்ற சங்கதிகளாலும் எனக்கு ஐயமுண்டாயிற்று. அதனாற்றான் அவன் செவியைப்பற்றிய விவரத்தைக் கேட்டேன். சில வருடங்களுக்கு முன் அவன் ஒரு ஹோட்டலில் ஒரு போக்கிரியோடு சண்டையிட்டபோது அப்போக்கிரி அவன் இடது காதை மிக்க அகோரமாய்க் கடித்து விட்டான். அது அவனைக் குறிக்கும் பெரிய அறிகுறியாய் விட்டது. பாபம்! அத்தகைய அயோக்கியரிடம் கற்பகம் சீமாட்டி சிக்கிக்கொண்டிருக்கிறாள். அவர்கள் இருவரும் எத்தகைய அக்கிரமத்திற்கும் அஞ்சாதவர்கள். இதுவரையிலேயே யச்சிமாட்டி இறந்துவிட்டாளோ வென்றுகூட கருதலாகும். அப்படி யில்லாவிட்டால் அவள் ஒருவித நிர்ப்பந்தமான சிறையில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். அதனாற்றான் தங்கம்மாளுக்காவது வேறு எந்த நண்பருக்காவது கடிதம் எழுத முடியாமலிருக்கிறாள். அவள் இந்நகரத்திற்கு வாராமலேயிருக்கவும் கூடும். அல்லது இதன் வழியாக வேறெங்கேனும் போய்விட்டு மிருக்கலாம். ஆனல் இவர்கள் அன்னிய நாட்டில் இரத்தினபுரிக்கு வருவதாய் எழுதி வைத்து விட்டு வந்திருக்கிறார்கள். அந்த அன்னிய நாட்டுப் போலீஸ் ஏற்பாடுகள் மிக்க தந்திரமானவை. அப்போலீஸாரை ஏமாற்ற இவர்களால் முடியாது. இதை விட்டு வேறிடங்களிற் சென்றால் இவர்கள் மறைந்தி

ருக்க வசதியான இடம் அகப்படுவது மிக்க கஷ்டம். இந்த நகரத்தில் சுலபமாய் மறைந்திருக்கலாம். என் யோசனைக்கு இவர்கள் இங்கிருக்கிறார்களென்றே தோன்றுகிறது. தற்சமயம் நாம் இவர்கள் எங்கிருக்கிறார்களென்று யூகிக்கமுடியாது. இப்போது போஜனம் செய்துகொண்டே பேசாமலிருப்போம். பிறகு மாலையில் நான் வெளிச்சென்று இன்ஸ்பெக்டர் இலக்ஷ்மணஸிங்கைக் கண்டு பேசுகிறேன்" என்றான்.

அவ்வாறே மாலை ஆறுமணிக்குப் புறப்பட்டுத் துப்பறியும் இலாகாவின் காரியாலயத்திற்குச் சென்று இலக்ஷ்மணஸிங்கை கண்டு அவனிடம் சங்கதியாவும் கூறி சேஷப்பன் என்ற ஆகாசப்புரட்டனுடைய அடையாளங்களைக் கூறி அவர்கள் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதாகத் தகுதியான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வந்தான்.

இலக்ஷ்மணஸிங்கும் அவன் ஆட்களும் ஒருபுறமும், ஆனந்தஸிங்கும், விசுவநாதனும் ஒருபுறமுமாகத் தேடத் தொடங்கினார்கள். நகரத்திலுள்ள பிரசித்திபெற்ற கள்ளர், போக்கிரிகள் முதலியவர்களுடைய வாசஸ்தலங்கள், இரகசியமான இடங்கள், எல்லாம் தேடினார்கள். பத்திரிகைகளில் பிரசுரங்கள் செய்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. கோடிக்கணக்கான ஜனங்கள் வசிக்கும் அந்தப் பிரமாண்டமான நகரில் அவர்கள் மூவரும் பூமிக்குள் புதைக்கப்பட்டவர்கள் போல் மறைந்து விட்டார்கள். ஆகாசப்புரட்டன் மனைவி அந்த ஊராளானதால் அவள் சுற்றத்தார் பழைய நண்பர்கள் ஆகியவர்கள் மேலெல்லாம் மோகூல் வைத்துப்பார்த்தார்கள். ஒருவரேனும் அவர்களிருக்குமிடத்திற்குச் செல்லவில்லை. ஆனந்தஸிங் நகைகள் அடமானம் வைக்கும் கடைகளில் விசாரிக்கத் தன் ஆட்களில் இருவரை விட்டிருந்தான். ஒரு வாரம் வரையில் ஒரு சங்கதியும் அகப்படவில்லை. அதற்

குள் கனம் பச்சைப்பிள்ளை இருமுறை ஆவலோடு வந்து ஆனந்தஸிங்கை விசாரித்துவிட்டுச் சென்றான்.

ஒருவாரங் கழிந்தபின் ஒருநாள் உளவு கிடைத்தது. அதாவது மேற்குச்சாலை வீதியிலுள்ள பாவாஜீ என்பவனது அடகுக்கடையில் ஒரு இரத்தினமாலை - புராதனமாதிரி நகை, அடகு வைக்கப்பட்டதாகத் தெரியவந்தது. அந்த நகையின் மாதிரியால் அது கற்பகம் சீமாட்டியிடமிருந்த நகைகளில் ஒன்றென்று ஆனந்தஸிங் தெரிந்துகொண்டான். அதை யடகுவைத்தவன் யார் என்று விசாரித்தபோது கடைக்காரன் கூறிய அடையாளங்களால் அவன் சேஷப்பன் என்ற குருவே என்று தெரிந்தது. அங்கு எழுதி வைத்திருக்கும் பெயர் முதலியவை மாறுபெயரே.

இச்சங்கதி யறியப்பட்ட தினம் பச்சைப்பிள்ளை மூன்றும் முறை ஆனந்தஸிங்கிடம் வந்தான். அவன் வியாகூலத்தால் மிகவும் குன்றிவிட்டிருந்தான். "அய்யோ! ஆனந்தஸிங்! இக்கலக்கம் என்னால் சகிக்க முடியவில்லை. இதில் எனக்கு ஏதேனுமொரு வேலையாயினும் கொடு. இன்றேல் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும்" என்றான்.

ஆனந்தஸிங், "ஆ! இச்சமயம் உனக்கு வேலை வைக்கிறேன். இப்போது அக் கள்ளப்பயல் கற்பகத்தின் நகைகளில் ஒன்றை அடகு வைத்திருக்கிறான். இச்சமயம் நாம் அவனைப் பிடித்துக்கொள்ளவேண்டும்..." என்றதே, பச்சைப்பிள்ளை, "அந்தோ! அப்படியாயின் கற்பகத்திற்குக் கெடுதிசம்பவித்து விட்டதென்று அர்த்தமோ?" என்றான்.

ஆனந்தஸிங் தலையசைத்து, "இதுகாறும் அவர்கள் அச் சீமாட்டியைச் சிறையாக வைத்துக்கொண் டிருப்பதாகக் கருதுவோம் - இனி அவளை விட்டுவிடுவது அவர்களுக்கு ஆபத்தாய்முடியும். நாம் எதற்கும் கெட்ட சங்கதிக்கே

ஆபத்தமாயிருக்கவேண்டும். ஆனால் கடவுள்மேல் நம்பிக்கை வைத்திருப்போம்" என்றான்.

பச்சைப்பிள்ளை:—"நான் என்ன செய்யவேண்டும்?" என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

ஆனந்த:—இந்த ஆசாமிகள் உன்னை யொருபோதும் பார்த்ததில்லையே?

பச்சைப்பிள்ளை இல்லை யென்றான்.

ஆனந்த:—ஒருசமயம் மறுமுறை யவன் வேறொரு அடகுக் கடைக்குச் சென்றாலும் செல்லலாம். அப்படி நேர்ந் தாலும் நாம் மறுபடிதான் முயற்சி செய்யவேண்டும். ஆனால் இந்தக்கடைக்காரன் அவனை யொரு கேள்வி யும் கேட்காமல் அவன்கேட்ட தொகையை யுடனே கொடுத்துவிட்டிருக்கிறான். ஆகையால் அவன் மறு படி பெரும்பாலும் இவனிடமே வருவான். நான் அந்தக்கடைக்காரனுக்கு ஒரு கடிதம் உன்னிடம் கொடுக்கிறேன். அதை யவனிடமளித்தால் அவன் உன்னைக் கடையில் தக்க இடத்தில் இருக்கச் செய் வான். அந்தக் கள்ளப்பயல் வந்தால் நீ வேறொன் றும் செய்யவேண்டாம். அவன் திரும்பிச் செல்லும் போது நீ அவனை யறியாமலே அவன் பின்னால் தொடர்ந்துசென்று அவன் வாசஸ்தலத்தை யறிந்து கொண்டு வந்துவிடு. ஒரு சமயம் அவன் செல்லும் போது நேராக வீட்டிற்குச்செல்லாமல் வழியில் யாரிட மாவது பேசச்செல்வான். ஆகையால் அவன் வீட் டில் நுழைந்தபின் அரைமணி நேரமாவது நீ மறைந்து நின்று பார்த்துவிட்டு அது அவன் வசிக்குமிடமே யென்று தெரிந்துகொண்டு வா.

பத்திரம்! உன் கோபம், ஆத்திரம், முரட்டுத்தனம் எதையும் காட்டலாகாது. கொஞ்சம் காட்டினையோ நிச்சய

மாய் நீயே கற்பகத்தின் மரணத்திற்குக் காரணமாய்விடு வாய். நான் சொன்னதற்குமேல் ஒன்றும் நீ செய்யலா காது ; பத்திரம் பத்திரம்'' என்று கூறினான்.

கனம் பச்சைப்பிள்ளை, "நான் சத்தியமாய் உன் கட் டளையை மீறி எள்ளளவு காரியமும் செய்யமாட்டேன்" என்று வாக்களித்துவிட்டு ஆனந்தலிங் எழுதிக்கொடுத்த கடிதத்தை வாங்கிக்கொண்டு சென்றான். இந்தக் கனம் பச் சைப்பிள்ளை யென்பவன் பிரசித்திபெற்ற ஒரு கப்பற்படை சேனாதிபதியின் புத்திரன்.

இரண்டு நாள் வரையில் அவனிடமிருந்து ஒரு சமா சாரமும் வரவில்லை. மூன்றாவது நாள் மாலை பச்சைப்பிள்ளை வெளுத்த முகத்தோடும் நரம்புகளெல்லாம் துடித்துக் கொண்டு ஆத்திரத்தோடு ஆனந்தலிங்கும் விசுவநாதனும் உட்கார்ந்துகொண் டிருக்கும் அறைக்குள் வந்தான். அவன் ஆனந்தலிங்கை நோக்கி "அவன் அகப்பட்டுக் கொண் டான். அகப்பட்டுக் கொண்டான்'' என்று குளறிக் கொண்டே கூறினான்.

ஆனந்தலிங் இரண்டொரு வார்த்தைகளால் அவனைச் சாந்தப்படுத்தி, "பொறுமையாயிரு-சாந்தமாய்-நீ என்ன கண்டறிந்து வந்தாய்? என்ன சங்கதி? நிதானமாய் நடந்த தைக் கூறு'' என்று அவனை யொரு சாய்ப்பு நாற்காலியில் உட்காரவைத்தான்.

அதன்மேல் பச்சைப்பிள்ளை பெருமூச்சு விட்டு இரண் டொரு விநாடிகள் மனதைத் தேற்றிக்கொண்டு, "அவள் ஒரு மணிக்கு முன்புதான் வந்தாள். அவள் இப்போது கொண்டுவந்தது முன் அடகு வைக்கப்பட்ட மாலையின் ஜதையாகிய இன்னொரு மாலையே. அவள் உயரமாய் வெளுத்த முகமும் கருடபார்வையும் உடையவள். இம்

முறை யவன் வராமல் தன் மனைவியை யனுப்பினான்” என்றான்.

ஆனந்த:—“ஆம் ஆம். அவளே ஆசாமி. அப்புறம் நடந்த சங்கதியைக் கூறு” என்றான்.

பச்சைப்பிள்ளை:—அவள் அக்கடையிலிருந்து திரும்பியதே நான் அவளைப் பின்பற்றினேன். அவள் இராஜவீதியே சென்று அங்கொரு கடைக்குள் நுழைந்தாள். அந்தோ! கடவுளே. அது என்ன கடை தெரியுமோ? சவப்பெட்டி செய்யும் கடை” என்று கூறிவிட்டு மிரட்சியோடு விழித்தான்.

அதைக்கேட்ட ஆனந்தஸிங் திடுக்கிட்டு விட்டான். “அப்புறம் அப்புறம்?” என்று ஆத்திரத்தோடு வினவினான்.

பச்சைப்பிள்ளை:—அவள் அந்தக் கடைக்காரியிடம் சமீபத்தில் சென்றாள். நானும் பின்பக்கம் சென்று நின்றேன். உள்ளே சென்றவள் “ஆலசியமாய் விட்டது” என்று அர்த்தமாகும் வார்த்தைகளைக் கூறினாள். கடைக்காரி “இது முன்னமே அனுப்பப்பட்டிருக்க வேண்டும்” என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு “இது ஒரு அசாதாரணமான மாதிரியாக விருப்பதால் ஆலசியமாயிற்று” என்றாள். அதற்குள் இருவரும் என்னைப்பார்த்து விடவே நான் சாதாரணமான ஒரு கேள்வி கேட்டுவிட்டுத் திரும்பிவிட்டேன்” என்றான்.

ஆனந்த:—“பேஷ்! நீ நன்றாய் வேலை செய்தாய். அப்புறம் நடந்த சங்கதி?” என்றான்.

பச்சைப்பிள்ளை:—அவள் வெளியில் வரும்போது நான் ஒரு இடத்தில் மறைந்து நின்று பார்த்தேன். அவளுக்குச் சந்தேகம் உண்டாயிற்றென்று தெரிந்தது. ஏனெனில் அவள் வெளியில் வந்து நாற்புறங்களிலும் பார்த்து விட்டுக் கடைசியில் ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு

புறப்பட்டாள். நற்காலமாய் எனக்கும் ஒரு வண்டி அகப்பட்டது. நான் உடனே அதிலேறி அவளைத் தொடர்ந்து சென்றேன். அவள் பெரிய கடை, பள்ளப்பன் தோட்டம் 36-வது எண்ணுள்ள வீட்டி லிறங்கினாள். நான் அந்த வீதியின் கோடியில் சென்று வண்டியை விட்டிறங்கி ஒரு இடத்திலிருந்து சற்று நேரம் அவ் வீட்டைக் கவனித்து கொண்டிருந்தேன்." என்றான்.

ஆனந்த:—யாரையேனும் பார்த்தாயோ ?

பச்சைப்பிள்ளை:—"கீழ்க்கட்டிலிருந்த ஒரு சாளரம் தவிர மற்ற எல்லாச் சாளரங்களும் இருளாக விருந்தன. சாளரங்களின் திரைகளெல்லாம் விடப்பட் டிருந்தன. உள்ளே யிருப்பதைப் பார்க்கமுடியவில்லை. நான் அங்கே நின்று கொண்டு இப்போது என்ன செய்வதென்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். அச்சமயம் ஒரு பெரிய சாமான் வண்டி வந்து வீட்டெதிரில் நின்றது. இரண்டு ஆட்கள் அதன் முன் பக்கம் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் வண்டியை விட்டிறங்கிக் கதவைத் தட்டியதும் அம்மாதே வந்து திறந்தாள். அந்த ஆட்கள் ஒரு பெரிய சவப் பெட்டியை யுள்ளே யெடுத்துச் சென்றார்கள்," என்றான்.

அதைக்கேட்டதே ஆனந்தஸிங் திடுக்கிட்டு "ஹா!" என்றான்.

அதற்குள் பச்சைப்பிள்ளை:—"அதைக் கண்டதே எனக்கு ஆத்திரம் உண்டாய் விட்டது. உடனே பாய்ந்து சென்று அவ்வீட்டிற்குள் நுழைந்து பார்ப்பதென்று கருதினேன். ஆனால் அதற்குள் கதவைத்திறந்த அம்மாது என்னைப்பார்த்து விட்டதோடு, நான் முன்பு சவப்பெட்டி செய்யும் கடையில் தான் கண்ட ஆளே

யென்று தெரிந்துகொண்டு தட்டென்று கதவை மூடிக்கொண்டாள். நான் உனக்கு வாக்களித்ததை யெண்ணிக்கொண்டு பேசாமல் இதோ வந்துவிட்டேன்” என்றான்.

ஆனந்தஸிங் “நீ நேர்த்தியாகவே உன் வேலையைச் செய்தாய்” என்று கூறிக்கொண்டே ஒருகடிதத்தில் சிலவரிகளையெழுதிப் பச்சைப்பிள்ளையிடமளித்து, நாம் வாரன்டில்லாமல் சட்டப்படி ஒன்றும் செய்யமுடியாது. ஆகையால் நீ யெடுத்துக் கொண்டுபோய் இதில் குறித்த அதிகாரியிடமளித்து ஒரு வாரன்ட் பெற்றுக்கொண்டு வந்துவிட்டால் பேருதவியாகும். வேண்டிய ருசுவிருக்கிறது - நகைகளையடகு வைத்ததே போதுமானது. இன்ஸ்பெக்டர் இலக்ஷ்மணஸிங் மற்ற விஷயங்களைப் பார்த்துக் கொள்வான்” என்றான்.

பச்சைப்பிள்ளை:—“ அய்யோ! அதற்குள் அச்சண்டாளர்கள் அவளைக் கொன்றுவிடுவார்களே! அச்சவப்பெட்டியேன். அது என்னத்திற்காக?” என்றான்.

ஆனந்த:—“கற்பகம் சீமாட்டிக்காக நாம் எவ்வளவு செய்யக் கூடுமோ அவ்வளவும் செய்வோம். ஒரு விநாடி கூட ஆலசியம் செய்யலாகாது. எல்லாச் சங்கதியையும் என்னிடம் விட்டு விடு; உன் வேலையை மட்டும் நீ நான் கூறியபடி செய்” என்றான்.

பச்சைப்பிள்ளை யவ்வாறே செய்வதாய்க் கூறி விடைபெற்றுச் சென்றான்.

3-வது அத்தியாயம்.

தினம் பச்சைப்பிள்ளை சென்றபின் ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி, "விசுவநாதம்! பச்சைப்பிள்ளை போலீஸ் இலாகாத் துப்பறிவோரைத் தூண்டிவிடுவான். நாம் நமது சொந்தவழியில் வேலைசெய்யவேண்டும். இது மிக்க ஆபத்தான நிலைமை. ஆகையால் நாம் துணிகரமாய் வேலை செய்யவேண்டிய காலம். நாம் ஒரு விநாடிகூட ஆலசியம் செய்யாமல் பள்ளப்பன் தோட்டத்திற்குச் செல்ல வேண்டும்" என்றான்.

உடனே இருவரும் ஒரு வண்டியிலேறிச் சென்று கொண்டிருக்கையில் ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி, "நண்பனே! இதை யாலோசித்தால் நடந்தவிஷயம் நன்றாய் விளங்குகிறது. அச்சண்டாளர்கள் எப்படியோ கற்பகம் சீமாட்டியை அவளுடைய நம்பகமான தோழியிடமிருந்து பிறித்துவிட்டுத் தந்திரமாய் இங்கழைத்து வந்துவிட்டார்கள். அவளைச் சிறையாள்போல் நடத்தியிருந்ததால் அவள் தன் நண்பர் எவர்க்கும் கடிதம் எழுதமுடியவில்லை. ஒருசமயம் எழுதியிருந்தாலும் அவர்கள் அதை வெளிக்குச் செல்லாதபடி மறைத்துவிட்டிருப்பார்கள். தங்களுக்கு உளவாயிருக்கும் யாரோ ஒரு ஆள் மூலமாய் இங்கு தகுதியான ஒரு வீட்டை யேற்படுத்திக்கொண்டார்கள். அங்கு சேர்ந்ததும் அவர்கள் முதலிலிருந்தே கண் வைத்திருந்த அவள் நகைகளைக் கைபற்றிக்கொண்டார்கள். அச்சீமாட்டி விஷயத்தில் கவலை யெடுத்துக் கொள்கிறவர்கள் ஒருவருமில்லை யென்று கருதி, ஆபத்து நேரிடாதென்ற நம்பகத்தால் முன்னமே இரண்டு நகைகளை அடகு வைத்துவிட்டார்கள். அவளை விட்டு விட்டால் அவள் இவர்கள் நடக்கையை வெளியிட்டு இவர்களுக்கு ஆபத்தை யுண்டாக்குவாள். ஆகையால் அவளை

விடுதலை செய்யமுடியாது. அவ்வாறே யவளைச் சதாகாலமும் சிறையாக வைத்துக்கொண் டிருக்கவுமுடியாது. ஆகையால் என்ன செய்வது. அவளைக்கொன்றுவிட வேண்டியதே. இன்றேல் தாங்கள் தப்பமார்க்கமில்லை. இது தெளிவாய்த் தெரிகிறதல்லவா?" என்றான்.

விசுவநாதன் "எள்ளளவு சந்தேகமுமின்றி நன்றாய் விளங்குகிறது" என்றான்.

ஆனந்த:—"இப்போது இன்னொரு வழியாக ஆலோசிப்போம். விசுவநாதன்! நாம் ஒரு விஷயத்தைப் பற்றி இரண்டு வழிகளில் ஆலோசிக்கும்போது, இரண்டிற்கும் பொருத்தமானதாக ஒரு உண்மை வெளிப்பட்டு அதே யுண்மையாய் விளங்கி விடும். இப்போது நாம் இன்னொரு வழியிலிருந்து செல்வோம். சீமாட்டியைப் பற்றிய விஷயத்திலிருந்து தொடங்க வேண்டாம். சவப் பெட்டியைப்பற்றிய விஷயத்திலிருந்து ஆரம்பம் செய்வோம். அங்கிருந்து பின்னுக்குச் செல்வோம். இப்போது நடக்கும் விஷயங்களால் கற்பகம் சீமாட்டி இறந்துபோனாள் என்று ஐயமறப் புலப்படுகிறது. அதோடு ஒருசவம் எப்படி அடக்கம் செய்யப்பட வேண்டுமோ அந்த ஒழுங்கின்படி அதற்கு வேண்டிய வைத்தியன் அத்தாட்சிப் பத்திரம் முதலிய யாவும் இருப்பதாகவும் தெரிகிறது. அவர்கள் அவளைக்கொன்றுவிட்டிருந்தால் இரண்டாம் பேர்க்குத் தெரியாமல் வீட்டின் பின்னுள்ள தோட்டத்தில் புதைத்துவிட்டிருப்பார்கள். ஆனால் இங்கோ எல்லாம் பகிரங்கமாய் நடைபெறுகிறது. இதன் அர்த்தமென்ன? உண்மையில் அவர்கள் காண்போர்க்குச் சாதாரணமான இயற்கை மரணம்போல் தோற்றும்படி ஏதோ பாஷாணத்தால் அவளைக் கொன்றுவிட் டிருக்கிறார்கள். அப்

படியாயினும் ஒரு வைத்தியரைக் கூப்பிட்டுக்காட்ட மிக்க துணிகரம் வேண்டும். ஆயினும் அவ்வைத்தியன் அவர்களுக்கு உடந்தையாக இருக்கவேண்டும். அத்தகைய விஷயம் நடக்குமென்று எப்படி நினைப்பது?

விசுவ:—அவர்கள் வைத்தியர் கொடுத்ததாகக் கள்ள நற்சாக்ஷிப்பத்திரம் எழுதி வைத்துக்கொண் டிருந்தால்?

ஆனந்த:—"ஆ! அது மிக்க அபாயகரமான வேலை-இராது இராது. அப்படிச் செய்திருப்பார்களென்று நான் நினைக்கவில்லை" என்றதும் சாரதியை நோக்கி, "வண்டியை நிறுத்து" என்றான்.

பிறகு "விஸ்வநாதம்! அடகுக்கடையைத் தாண்டி விட்டோம். இது சவப்பெட்டி செய்யும் கடை. உன் பார்வை எதிரிக்கு நம்பகத்தை யுண்டாக்கத் தக்கதாக இருக்கிறது. நீ கடைக்குள் சென்று பள்ளப்பன் தோட்டத்தில் சவ அடக்கம் எப்போது என்று கேள்" என்றான்.

விசுவநாதன் அவ்வாறே சென்று அங்கிருந்து கடைக்காரியை நோக்கிக் கேட்டான். அவள் சற்றும் தடுமாற்றமின்றி "அய்யா! அங்கு சவ அடக்கம் காலை எட்டு மணிக்கு நடக்கப்போகிறது" என்றாள்.

ஆனந்தஸிங் "பார்த்தாயா விஸ்வநாதம்? எல்லாம் வெளிப்படையாகவே நடக்கிறது. எவ்வாறே அதற்கு வேண்டிய அனுமதி யாவும் அதிகாரிகளிடம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதில் என்ன சூதிருக்கிறதோ தெரியாது. ஆனால் அவர்கள் நமக்கென்னமோ பயமில்லை என்ற நம்பிக்கை யோடிருக்கிறார்கள். இப்போது நாம் செய்யவேண்டிய வேலை யென்ன தெரியுமோ? நேரில் சென்று கேட்டறிய வேண்டியதே. துப்பாக்கி கொண்டு வந்தாயல்லவா?" என்றான்.

"விசுவநாதன் துப்பாக்கியும் இருக்கிறது, தடியுமிருக்கிறது" என்றான். ஆனந்தஸிங் "இப்போது நாம் போலீஸாருக்காகக் காத்திருக்க முடியாது. சட்டத்தைக் கவனிக்கவுமுடியாது" என்று கூறிவிட்டு வண்டிக்காரனை நோக்கி "நீ செல்லலாம்" என்றதே அவன் வண்டியை யோட்டிக் கொண்டு போய்விட்டான்.

ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் அங்கிருந்து நடந்து சென்றார்கள். பள்ளப்பன் தோட்டத்தி னெதிரிற் சென்றதும் ஆனந்தஸிங் "விசுவநாதம்! நாம் வழக்கமாய்ப் பன்முறை சென்றதுபோல் இதிலும் இருவர் பொறுப்பாகவே வேலை செய்வோம்; அதிஷ்டப்படி யாகட்டும்" என்று கூறி விட்டுக் கதவைத் தட்டினான்.

உடனே உயரமான ஒரு ஸ்திரீ வந்து கதவைத்திறந்து "என்ன வேண்டும்?" என்று கேட்டுக்கொண்டே இருண்ட வீதியைக் குறிப்பாய்ப் பார்த்தாள்.

ஆனந்தஸிங் "சேஷப்பா என்ற குருவைக் கண்டு பேச வேண்டும்" என்றான்.

அம்மாது "அத்தகைய பெயருள்ள ஆள் இங்கொருவருமில்லை" யென்றாள். அவ்வாறு கூறிக்கொண்டே கதவை மூடப்போனாள். ஆனால் ஆனந்தஸிங் முன்சாக்கிரதையாய் ஒரு காலை வாயிற்படிக் குட்பக்கம் வைத்துவிட்டு "சரி; அப்படியாயின் இந்த வீட்டில் யார் வசிக்கிறாரோ அந்த ஆடவரைக் காணவேண்டும். அவர் பெயர் எதுவாயிருந்தாலும் இருக்கட்டும்" என்றான்.

அம்மாது சற்று தடுமாற்றமுற்றுக் கடைசியில் கதவை நன்றாகத்திறந்து "அப்படியாயின் வாருங்கள் உள்ளே" என்றாள். இவர்கள் உள்ளே நுழைந்ததும் அவள் கதவை மூடிவிட்டு "என்கணவர் உலகில் எத்தகைய மனிதரைப் பார்க்கவும் பயப்படுகிறவரல்ல. அவர் பயப்படவேண்டிய

காரணமுமிராது" என்று கூறிக்கொண்டே இவர்களை யழைத்துப் போய் முன்னேயிருக்கும் உட்காரும் அறையில் விட்டுத் தீபத்தைத் தூண்டிவிட்டு "என் கணவர் ஒரு நொடியில் உங்களிடம் வருவார்" என்று கூறிச்சென்றாள்.

அவள் கூறியவாறே ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் அந்த அறையைச் சரியாய் நோக்குவதற்குள் உயரமும் பருமனுமான ஒரு மனிதன் அங்குவந்தான். அவன் சுத்தமாய்ச் சௌளம் செய்துகொண்டு வழுக்கைத் தலையுடையவனாக இருந்தான். அவன் வாயின் அமைப்பால் மட்டுமே சாமுத்திரிகாலட்சணம் தெரிந்தவர்கள் அவன் ஈவிரக்க மற்ற மகாக் குரூரமான சித்தமுடையவன் என்று அறியலாமன்றி அவன் பரந்த முகத்தைமட்டும் நோக்குவோர் அவன் மிக்க கம்பீரமும் பெருந்தன்மையுமான குணமுடையவன் என்றே கருதுவார்கள். அம்முகமே யாவரும் அவனிடம் ஏமாந்து சிக்கிக்கொள்ளும்படி செய்தது.

அம்மனிதன் இவர்களிருக்கும் அறைக்கு வந்ததும், மிக்க சலகரணையான மாதிரியாய் "ஐயன்மீர்! இதில் ஏதோ தவறு நேர்ந்திருக்கிறதென்பது உண்மை. உங்களுக்கு யாரோ தவறான இடத்தைக் காட்டி விட்டார்கள். பெரும்பாலும் நீங்கள் இவ்வீதியில் இன்னும் சற்று தூரம் மேலண்டை சென்று விசாரித்தால்........" என்றதே ஆனந்தஸிங் கடுகடுப்போடு "போதும் போதும். இந்தப் பாடமெல்லாம் படிக்க அவகாசமில்லை. நீ முன்பு சேஷப்ப குரு என்ற பெயர் வைத்துக்கொண்டிருந்த ஆகாசப்புரட்டன் என்றும் நீ எங்கிருந்து வந்தாயென்றும் நான் பூரணமாய் அறிவேன். என் பெயர் ஆனந்தஸிங் என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை யிப்போது நான் கூறிய சங்கதியும்" என்றான்.

இம் மொழிகளைக் கேட்டதே அம்மனிதன் திடுக்கிட்டு

விட்டான். தன்னைத் தொடர்ந்து வந்த ஆசாமி எப்படிப் பட்டவன் என்பதையும் தெரிந்து கொண்டான் என்று அவன் முகக்குறியால் தெரிந்தது. ஆயினும் அவன் கைதேர்ந்த கள்ளன்-நாகரீகக் கள்ளன். கல்வி யறிவில்லாத வனும் மந்தனுமாகிய கள்ளனைச் சுலபத்தில் அஞ்சச்செய்து விடலாம். சாத்திர ஆராய்ச்சியும், கல்வி யறிவும், சூக்கும புத்தியும், தந்திர சாமார்த்தியங்களு முடைய கள்ளனைக் கலவரப்படச் செய்வது சாமானிய காரியமல்ல.

ஆகவே ஆகாசப்புரட்டன் என்ற அம்மனிதன் சாந்த மாகவே ஆனந்தஸிங்கை நோக்கி "அய்யா ஆனந்தஸிங்! உமது பெயரால் எனக்குப் பயமுண்டாகாது. ஒரு மனித னுடைய உள்ளம் பரிசுத்தமானதாக இருந்தால், அவன் மனச்சாட்சி களங்கமற்றதாக இருந்தால், அத்தகைய மனித னுக்குக் கலவரமுண்டாகச் செய்வது சுலபமான காரிய மல்ல. இந்த வீட்டிற்குள் நீங்கள் என்ன வேலையாக வந்தீர் கள்?" என்றான்.

ஆனந்த:—"நீ பட்டூரிலிருந்து உன்கூட அழைத்துவந்த கற்பகம் சீமாட்டி என்ற மாதை யென்ன செய்தாய் என்பதை யறியவே இங்கு வந்தோம்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே யம்மனிதன் சற்றும் தடுமாற்ற முறாமல் "ஆ! கற்பகம் சீமாட்டி என்ற மாது இருக்கும் இடத்தை மட்டும் எனக்கு நீங்கள் அறிவித்தால் நான் மிக்க சந்தோஷமடைவதோடு உங்களுக்கு மிக்க நன்றி பாராட்டுவேன். அம்மாது எனக்கு நூறு பவுன் கடன் கொடுக்கவேண்டும். அந்தத் தொகைக்கு இரண்டு கழுத் தணிகள் - எப்படிப்பட்டவை? கடைக்காரன் அவற்றை ஏறெடுத்தும் பார்க்கமாட்டே னென்றான்-அத்தகையவை தவிர வேறொன்றுமில்லை-அவள் என் மனைவியிடம் சிநேகம் செய்து கொண்டாள், என்னிடமும் மிக்க பக்தியோடும்

விசுவாசத்தோடும் நடந்து வந்தாள். அப்போது நாங்கள் பட்டூரிலிருந்தோம். அச்சமயம் நான் வேறு பெயரோடு தானிருந்தேன். நாங்கள் இங்குவரும் வரையில் எங்கள் கூடவே தொத்திக்கொண்டிருந்தாள். அவள் நியாயமாய் நடந்து கொள்வாளென்று நம்பியே அவளுக்கு வேண்டிய செலவுகளுக்கெல்லாம் நானே பணம் கொடுத்துவந்தேன். எங்களை விட்டுப் பிரிய மனமில்லாதவள் போல் நடித்தவள் இந்த நகரம் வந்து சேர்ந்ததே எப்படியோ கடுக்கா கொடுத்துவிட்டாள். அவளை மட்டும் நீங்கள் கண்டுபிடித்துக் காட்டினால் உங்களுக்கு மிக்க நன்றியுடையவனாக விருப்பேன்" என்றான்.

சாதாரணமாய் இத்தகைய வார்த்தைகளைக் கேட்கும் எவரும் இவன் கபடமில்லாதவனென்றும், இவன் கூறிய யாவும் உண்மையாகவே யிருக்குமென்றுமே நம்புவார்கள். ஆனால் ஆனந்தஸிங்கோ எவ்வளவோ சாமார்த்திமயான கள்ளர்களை யெல்லாம் கண்டிருக்கிறான். அதோடு இவன் யாரென்ற உண்மையை யவன் நன்கறிவான். ஆகையால் அவளைக் கண்டுபிடித்தால் உமக்கு நன்றி பாராட்டுவேன் என்று அவன் கூறியதே ஆனந்தஸிங்,

"ஆகா! கட்டாயம் கண்டுபிடிக்கவே கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறேன். உயிரோடாவது சவமாகவாவது அவளைக் கண்டுபிடித்தே தீர்வேன். இப்போது அவள் அகப்படுகிற வரையில் இவ்வீட்டைச் சோதனை செய்யப் போகிறேன்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டபோது உண்மையில் அவன் மனதில் திகில் உண்டாயிற்று. முகம் வெளுத்து விட்டது. ஆனால் இமைகொட்டுமட்டுமே. பின் அதைச் சட்டென்று மறைத்துக்கொண்டு உண்மையாகவே தன்னை யொருவர் அக்கிரமமாக அகௌரவப் படுத்துவதாய்க்கருதும் ஒரு

நிரபராதி எவ்வாறு கோபமடைவானோ அவ்வாறே ஆத்திரம் அடைந்தவவன்போல், "சோதனையா? ஏதோ வாரன்ட்? காட்டுங்கள்!" என்றான்.

ஆனந்தஸிங் சட்டென்று தன் ஜேபியில் கையிட்டு அங்கிருந்த ஆறு குண்டுசுடும் கைத்துப்பாக்கியைப் பாதி மேலுக்கிழுத்தபடி, "இதோ! வேறு வாரன்டு வரும்வரையில் இதுதான் வாரன்ட்" என்றான்.

கள்ளன்:—"சரி; நீங்கள் பகிரங்கக் கொள்ளைக்காரர்கள்" என்றான்.

ஆனந்தஸிங் "அது யாரென்பது எப்படியும் பின்னால் விளங்கிவிடும். இச்சமயம் நீ எங்களை யப்படியே கருதலாம். இதோ என்கூட இருக்கிறாரே-என் கூட்டாளி-இவர் பெரிய முரட்டுப்போக்கிரி. சற்றும் ஈவிரக்கம் இல்லாதவர். நாங்கள் இருவரும் சேர்ந்தே இவ்வீடு முழுமையும் சோதனை செய்யப்போகிறோம்" என்றான்.

கள்ளன் உடனே அந்த அறையின் கதவைத்திறந்து 'அன்னம்!' என்று தன் மனைவியைவிளித்து, "ஒரு போலீஸ்காரனை யழைத்துவா" என்றான். அவள் வெளியே செல்வது போலும் தெருக்கதவுதிறந்து மூடப்பட்டது போலும் சத்தம் கேட்டது.

ஆனந்தஸிங், "விசுவாசாதம்! நமக்குக் கொஞ்சகாலமேயிருக்கிறது" என்று மெதுவாய்க் கூறிவிட்டு, கள்ளனை நோக்கி, "பத்திரம்! நீ யேதேனும் தடைசெய்ய முயன்றாலும் உனக்குக் கெடுதியாகமுடியும்; தெரிகிறதா? நீ வாங்கி வந்த அந்தச்சவப்பெட்டி எங்கே?" என்றான்.

கள்ளன், "சவப்பெட்டியா! அதைப்பற்றி யுனக்காக வேண்டியதென்ன?" என்றான்.

ஆனந்த:—காரியமிருக்கிறது. அதை நான் பார்க்கவேண்டும்.

கள்ளன்:—அதில் இப்போது ஒருசவம் வைத்து அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆனந்த:—அப்படியாயின் அச்சவத்தை நான் பார்க்க வேண்டும்.

கள்ளன், "என் சம்மதத்தோடு ஒருபோதும் பார்க்க முடியாது" என்றான். ஆனந்தஸிங், "அப்படியாயின் உன் சம்மதமில்லாமலே பார்க்கவேண்டியதுதான்" என்று கூறி விட்டுக் கள்ளனைக் கரத்தால் ஒருபுறம் தள்ளிவிட்டு அங்கி ருந்த கூடத்தில் பிரவேசித்தான். அங்கு ஒரு அறையின் கதவு கொஞ்சம் திறக்கப்பட்டிருந்தது. உள்ளே தீபவொளி தெரிந்தது. ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் உடனே கத வைத் திறந்துகொண்டு அந்த அறைக்குள் நுழைந்தார்கள். அது போஜன அறை. அதன் மத்தியில் ஒரு மேஜைமேல் ஒரு மெழுகுவர்த்தியின் பக்கத்தில் அச் சவப்பெட்டி யிருந்தது.

ஆனந்தஸிங் அப்பெட்டியின் மேல்மூடியைத் திறந்து உள்ளே நோக்கினன். அப்பெட்டி சாதாரண சவப்பெட்டி போலில்லை. சாதாரணமான சவப்பெட்டிகள் இருக்கும் ஆழத்திற்கு இரண்டத்தனை இருந்தது. அதன் அடியில் மிக்க மெலிந்த ஒருசவம் இருந்தது. அது ஒரு வாடிவதங் கிய கிழவியின் சவம். எத்தகைய குரூரமான தீங்கிழைத்த தாக விருப்பினும் இது கற்பகம் சீமாட்டியின் வனப்பு வாய்ந்த தேகமாயிராது என்று நன்கு விளங்கிவிட்டது. அதைக்கண்டதே ஆனந்தஸிங் முகத்தில் மிக்க வியப்பான குறி யுண்டானதோடு சற்று நிம்மதியும் தோன்றியது. ஏனெனில் அப்பெட்டியில் கற்பகத்தின் சவமேயிருக்கும் என்று அவன் கருதியிருந்தான். இப்போது இது வரையி லேனும் கற்பகம் மடிந்ததாய்ப் புலப்படவில்லை யென்று தோன்றியதால் அவனுக்குச் சற்று நிம்மதி தோன்றியது.

ஆகையால், "அப்பா கடவுளே! இது வேறு யாரோ ஒருவருடைய தேகம்" என்றான்.

கள்ளன், "ஆனந்தஸிங்! நீ இப்பொது அடியோடு தவறிவிட்டாய் என்று ஒப்புக்கொள்ள வேண்டியதே. கற்பகம் சீமாட்டியின் சவம் இதில் இருக்கிறதென்று நீ கருதினாய். ஆனால் வேறொரு அனாதைக் கிழவியின்தேகம் என்று கண்டாய்" என்றான்.

ஆனந்தஸிங், "இருக்கட்டும்; இவள்யார்? இவள் விருத்தாந்தம் என்ன கூறு" என்றான்.

கள்ளன்:—இவள் பெயர் மங்களம். இவள் அனாதைகளின் தொழிற்சாலையி லிருந்தாள். நாங்கள் அத்தொழிற்சாலையைச்சேர்ந்த வயித்தியசாலையில் அசௌக்கியமாயிருந்த இவள்மேல் இரக்கங்கொண்டு அங்குள்ள அதிகாரிகளின் அனுமதிபெற்று இவளை யழைத்துவந்தோம். இங்கு கொண்டுவந்தபின் குறுக்குத் தெருவிலிருக்கும் இராமநாதன் என்ற வைத்தியரை யழைத்து வந்து எங்களாற் கூடியவரையில் சிகிச்சை செய்தோம். அவர் விலாசம் அவ்வீதியில் 50-வது இலக்கமுள்ள வீடு. அதை யெழுதிக்கொள். மறந்துவிடவேண்டாம். நாங்கள் என்ன செய்தும் மூன்றாவது நாள் இவள் இறந்து போனாள். சூலை நோயால் இறந்ததாக வைத்தியர் நற்சாக்ஷிப்பத்திரம் அளித்திருக்கிறார். இப்போது நீ யடியோடு தவறிவிட்டதாக அறிந்துகொண்டாயல்லவா? அச் சவப்பெட்டியைத்திறந்து உள்ளேயிருந்த உருவத்தைப் பார்த்தபோது, ஆகா! உன் முகத்தில் உண்டான விகாரத்தை யுடனே புகைப்படம் பிடித்திருந்தால் வெகு நன்றாயிருந் திருக்குமென்று கேலியாய்க் கூறினான்.

அக்கள்ளன், தான் மிக்க சாமார்த்தியமாய் ஆனந்த

ஸிங்கை யேமாற்றி விட்டதாய்க் கருதி அவனைக் கேலி செய்தான். கள்ளருக்கு எப்போதும் அறிவுகுறைவே. அவன் ஆனந்தஸிங் இதனாலேயே யேமாந்து விட்டா னென்று எண்ணிக்கொண்டான். ஆனந்தஸிங்கின் உண் மைச்சொரூபம் அவனுக்குத் தெரியாது.

ஆனந்தஸிங்கோ அவன் கேலிசெய்ததற்காக உள்ளத் திற் கோபமடைந்தாலும் அதையடக்கிக்கொண்டு "ஆயி னும் நான் வீடு முழுமையும் பார்க்கப் போகிறேன்" என்றான்.

அச்சமயம் அக்கள்ளனுடைய மனைவி போலீஸ்காரர் களையழைத்து வருவதைக் கண்டதால், ஆனந்தஸிங்கை நோக்கி "அப்படியா! வீட்டையா சோதிக்கப்போகிறாய்? அச்சங்கதி யப்புறம் தெரியும்" என்று கூறிவிட்டு அதற்குள் உள்ளே வந்த போலீஸாரை நோக்கி "வாருங்கள் உத்தி யோகஸ்தர்களே! இப்படி வாருங்கள்; இவர்கள் இருவரும் என்வீட்டிற்குள் வந்து நுழைந்துகொண்டு வெளியில் செல்ல மாட்டோமென்கிறார்கள். இவர்களை வெளியிற் றாத்த நீங்கள் உதவிசெய்ய வேண்டுமென்று பிரார்த்திக் கிறேன்" என்றான்.

அப்போது அங்கு வந்திருந்தவர்கள் ஒரு ஸார்ஜெண்டும் ஒரு கான்ஸ்டெபிலுமே. ஆனந்தஸிங் தன் பெயர் முதனி யவை யச்சடிக்கப்பட்ட சீட்டை யெடுத்து ஸார்ஜெண்டுக் குக் காட்டி "இதோ என் பக்கத்திருக்கும் நண்பர் எனக்கு எப்போதும் உதவியாக விருப்பவர்" என்றான்.

ஸார்ஜெண்ட்:—"ஆ! என்னை மன்னிக்கவெண்டும். தங் களைப்பற்றி நான் பூரணமாய்க் கேள்விப்பட் டிருக் கிறேன். ஆனால் வாரண்டில்லாமல் தாங்கள் இங்கிருப் பது சட்ட விரோதம்" என்று தாழ்ந்த குரலாய்க் கூறினான்.

ஆனந்த:—ஆம் ஆம்.

ஸார்ஜன்ட்:—நீங்கள் வெளியே போய்விடவேண்டும்.

ஆனந்த:—"அது சரிதான். விசுவநாதம்! நாம் வெளியே செல்லவேண்டியதே" என்று கூறிவிட்டு,

"ஸார்ஜன்ட்! நாங்கள் இங்கு வந்தபிறகே, தவறான அபிப்பிராயத்தால் இங்கு வந்தோமென்றும், இங்கிருப்பவர்கள் நிரபராதிகள் என்றும் தெரிந்துகொண்டேன்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே விசுவநாதனுக்கு மிக்க மனவருத்தமுண்டாயிற்று.

கள்ளன்:—"ஸார்ஜன்ட்! இம்மனிதன் வேணுமென்றே யென்னை யவமானப்படுத்தி யிருக்கிறான். இவர்கள் இருவரையும் சிறை செய்துகொண்டு போ" என்றான்.

ஸார்ஜன்ட்:—"ஆம். ஆனால் இவர்களை நான் நன்கறிவேன். எப்போது வேண்டுமாயினும் பிடித்துக் கொள்வேன்." என்று கூறி விட்டு,

ஆனந்தஸிங்கை நோக்கி "ஏனையா நீங்கள் இங்கு வந்தது அக்கிரமம், சட்டவிரோதம். உடனே வெளியில் வாருங்கள்" என்றான்.

பின்னர் கள்ளனை நோக்கி "மற்ற சங்கதிகளை நான் பார்த்துக் கொள்கிறேன்' இவர்களால் உங்களுக்கு இனி எவ்விதத் தொந்தரவும் நேராது" என்றான்.

கள்ளன் போலீஸாருக்கு மிக்க சந்தோஷத்தோடு வந்தன மளித்தான். ஆனந்தஸிங் அபஜெயமடைந்த ஒரு சேனாதிபதிபோல் முகவாட்டத்தோ டிருந்தான். விசுவநாதன்மனமோ மிக்கவேதனை யடைந்துவிட்டது. அடடா! இதென்ன ஆனந்தஸிங் கடைசியில் இத்தகைய மானமற்ற கோழையாய் விட்டானே. போலீஸார் இவன் தயவிற்குக் காத்துக் கொண்டிருப்பது போய் இவன் அவர்களிடம்

பணிந்து விட்டானே என்று மிக்க வியாகூலமான சிந்தனையோ டிருந்தான்.

கடைசியில் ஆனந்தஸிங், விசுவநாதன், போலீஸார் யாவரும் அவ்விட்டை விட்டு வெளிப்பட்டு வீதியின் கோடியில் போய் நின்றார்கள். அங்கு நின்றதும் ஆனந்தஸிங் கலகலவென்று நகைத்தான். அங்கு அதிகாரதோரணையாய்ப் பேசிய ஸார்ஜென்ட் ஆனந்தஸிங் எதிரில் நின்று "நான் நடந்துகொண்ட மாதிரியில் குற்றமில்லையென்று நினைக்கிறேன். தங்கள் சமிக்கையைக்கண்டே நான் அவ்வாறு நடந்து கொண்டேன்" என்றான்.

ஆனந்த:—"நீ செய்தது முழுமையும் சரியே. நான் அடியோடு ஏமாந்து விட்டதாகவும், மறுபடி யவர்களிடம் வரமாட்டேனென்றுமே யவர்கள் கருத வேண்டும்" என்றான்.

ஸார்ஜெண்ட்:—"இதில் நான் உதவி செய்யக்கூடியது ஏதேனுமிருந்தால் மிக்க சந்தோஷத்தோடு செய்ய ஆயத்தமா யிருக்கிறேன்" என்றான்.

ஆனந்த.—"ஒரு செல்வவதியாகிய சீமாட்டி காணாமற் போயிருக்கிறார்கள். கொலை நடந்திருக்குமென்று பெரிய சந்தேகம். அவள் இவ்வீட்டிலேயே யிருக்கிறாளென்று எனக்குத் தெரிகிறது. நாளைக்காலை எட்டு மணிக்கு இந்த வீட்டிலிருந்து ஒரு சவத்தை யடக்கம் செய்யக் கொண்டுபோகிறார்கள். அதற்குள் இதைக் கண்டுபிடிக்க வேண்டும். நான் வாரன்டுக்கு ஆள் அனுப்பினேன். இன்னும் வாரன்ட் வரவில்லை" என்றான்.

ஸார்ஜெண்ட்:—"அப்படியாயின் நான் இங்கு மோசூல் இருந்து ஏதேனும் காணப்படும் விசேஷங்களை யுடனே தங்களுக்கு வந்து அறிவிக்கிறேன்" என்றான்.

ஆனந்தஸிங் சற்றுநேரம் அவனிடம் இரகசியமாய் என்னமோ கூறிவிட்டு "சரி. அதுதான்" என்றான். அதன் பின் ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் அங்கிருந்து புறப் பட்டார்கள்.

4-வது அத்தியாயம்.

ஆனந்தஸிங்கும் விசுவாநாதனும் கள்ளன் வீட்டி லிருந்து புறப்பட்டதும் நேராய் அவன் கூறிய அனுதைத் தொழிற்சாலையின் வைத்தியசாலைக்குச் சென்று அங்கு விசாரித்ததில் அவன் கூறிய யாவும் உண்மையே யென்று புலப்பட்டது. பிறகு வைத்தியரிடம் சென்றார் கள். அவரும் "ஆம்; நான்றான் வைத்தியம் பார்த்தேன்; அதில் ஒன்றும் சந்தேகத்திற் கிடமானதாகப் புலப்பட வில்லை. புருடன் மனைவி யிருவரும் மிக்க நல்லவர்கள்போல் காணப்பட்டார்கள். அங்கு வேறு எவரையும் நான் பார்க்க வில்லை. ஆனல் எனக்கு ஒரு விஷயம்தான் வியப்பாகப்புலப் பட்டது. அதாவது அத்தகைய ஆசாமிகள் ஒரு வேலைக் காரனை வைத்துக்கொள்ளாமலிருப்பது தான்" என்றார்.

வைத்தியர் மூலமாய் அதற்குமேல் ஒரு விசேஷமும் கிடைக்கவில்லை.

ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் வைத்தியரை விட்ட தும் நேராக இன்ஸ்பெக்டர் இலக்ஷ்மணஸிங்கிடம் சென்றார் கள். கனம் பச்சைப்பிள்ளை ஆனந்தஸிங் கொடுத்த கடிதத் தை யவனிடம் அளித்ததே யவன் வாரன்ட் வாங்க முயன் றான். ஆயினும் அதில் எதிர்பாராத தடைநேர்ந்துவிட்டது. அதற்குள் தீபம் வைக்கும் வேளையாய் விட்டதால் நியாயாதி பதியின் கை யொப்பம் வாங்க முடியாமற் போய் விட்டது. பொழுது விடிந்தே யந்த வேலையாக வேண்டும். ஆகையால்

காலை ஒன்பது மணிக்கு ஆனந்தஸிங்கே அங்கு வந்து கூட விருந்து வாரன்ட்டு வாங்கிக்கொண்டு செல்வ தென்று ஏற்பாடு செய்து விட்டு அவனும் விசுவநாதனும வீட்டிற்குத் திரும்பினார்கள்.

கள்ளன் வீட்டில் ஸார்ஜன்ட் வந்தபோது ஆனந்த ஸிங் தான் செய்ததே தவறென்று ஒப்புக் கொண்டு இணங்கி விட்டது அபிநயமே யன்றி யுண்மையல்ல. அதை ஸார்ஜென்ட அறிந்துகொண்டே அவனும் சாதாரண மனித னிடம் நடந்து கொள்வது போல் நடந்து கொண்டான். ஆனந்தஸிங் எப்போது தான் பதக்கத்தைக் காட்டாமல் வெறும்பெயர் விலாசம் எழுதிய சிட்டைக் காட்டினனே அப்போதே ஸார்ஜென்ட் தெரிந்து கொண்டு, இதற்கு மேல் இங்கு விவகாரம் நடத்த இவனுக்குப் பிரியமில்லை யென்றுணர்ந்தான்.

அங்கு கற்பகத்தின் சவமாவது அவளாவது, அகப் படாமல், பதிலுக்கு ஒரு கிழவியின் சவம் அகப்பட்டபோதி லும். வெளிக்குப் பார்த்தால் எல்லாம் ஒழுங்காகவே தோன் றினும் ஆனந்தஸிங் மனதில் மட்டும் திருப்தி யுண்டாக வில்லை. அச்சமயம் அதற்குமேல் என்ன செய்யவேண்டு மென்று புலப்படவுமில்லை. ஆகையால் நாம் அடியோடு தவறி விட்டதாக அபிநயம் செய்தால் தான் இக்கள்ளன் இனி நாம் மறுபடி வரமாட்டோம் என்று நம்பிக்கொண்டு தன் காரியத்தைத் தாராளமாய் நடத்துவான் என்று ஆலோசித்தே அப்படிச் செய்தான். வாரன்ட் வாரததால் பகிரங்கமாகச் சோதனை செய்ய இடமில்லை. இதுகாறும் அவன் நடந்துகொண்ட விவகாரமே சட்டப்படி தவறு. யாவும் உத்தேசித்தே யப்படி நடித்தான். அவன் எண்ணி யபடியே ஆகாசப்புரட்டன் ஏமாந்து விட்டான். "நாம் பூர ணமாய் இவனை யேமாற்றிவிட்டோம். இப்போது நாம்

தப்பினால் போதுமென்று ஆனந்தஸிங் நினைக்கிறான்- இனி நம் கிட்ட வரமாட்டான்" என்று அவன் எண்ணிக்கொண்டான். அதனால்தான் அவர்களிருவரை சிறை செய்யும்படி ஸார்ஜன்டிடம் கூறினான்.

ஆனந்தஸிங் கள்ளன் வீட்டில் ஸார்ஜன்ட் வந்தவுடனே நடித்ததை விசுவநாதன் உண்மை யென்றே யெண்ணி விட்டான். அப்போது அவனுக்கு மிக்க அவமானமாகவும் கோபமாகவும் இருந்தது. அவன் மனம் மிக்க புண்ணுப்விட்டது. வெளியில் வந்த பிறகே அவன் சங்கதியின் உண்மையை யுணர்ந்தான்-இருவரும் வீட்டிற்கு வந்தபின் முகவாட்டத்தோடு உட்கார்ந்தார்கள். விசுவநாதன் விடியுமட்டும் பொறுமையாய் இருக்க வேண்டியதே யென்று எண்ணிக்கொண்டான்.

இரவு சுமார் பனிரண்டு மணிக்கு ஸார்ஜென்ட் வந்தான். ஆனந்தஸிங் ஏதாவது விசேஷம் கிடைத்ததா? என்று கேட்டான். ஸார்ஜென்ட் "வீட்டில் சாளரங்களின் மூலமாய் அங்கு மிங்கும் கையில் பிடித்த தீபத்தோடு ஆள் நடமாடுவது காணப்பட்டது. ஏதோ மர்மமான விவகாரம் நடக்கிறதென்று மட்டும் தெரிகிறது. ஆனால் வெளியிலிருந்து ஒருவரும் உட்செல்லவில்லை. உள்ளிருந்தும் ஒருவரும் வெளியில் செல்லவில்லை" என்றான்.

ஸார்ஜென்ட் சென்றபின் ஆனந்தஸிங் என்ன கூறுகிறான் பார்ப்போமென்று விசுவநாதன் மிக்க ஆவலோடு அவன் முகத்தை நோக்கினான். ஆனந்தஸிங்கோ மிக்க கோபத்தோடிருக்கிறான். அவனோடு பேசவே சமயமாயில்லை. அவன் படுக்கைக்குச் செல்லாமலே அடியுண்ட வேங்கைபோல் முன்னும் பின்னும் உலவிக்கொண்டும் தன் கரங்களை யடிக்கடி நெறித்துக்கொண்டும் மேஜைமேலடித்துக்கொண்டு மிருந்தான். விசுவநாதன் பக்கத்திலுள்ள

அறையில் படுத்திருந்தான். ஆனால் அவனுக்கும் நித்திரை பிடிக்கவில்லை. ஆனந்தஸிங் பல வழிகளாய் இந்த மர்மத்தி னுண்மையைக் கண்டுபிடிக்கக் கஷ்டப்படுகிறனென்று விசுவநாதன் உணர்ந்து கொண்டான். அச்சமயம் ஆனந்த ஸிங்கிடம் போய் பேசலாகாதென்று அனுபவத்தால் அவனறிவானதலால் பேசாமலிருந்தான்.

கடைசியில் பொழுதும் விடிந்தது. சுமார் ஏழரைமணி யாயிற்று. விசுவநாதன் படுக்கையை விட்டெழுந்து உடை களைச் சரியாக அணிந்துகொண்டு வெளியில் வரப்போனன். அச்சமயம் அறையின்கதவு தடாலென்று திறக்கப்பட்ட தும் ஆனந்தஸிங் மிக்க ஆத்திரத்தோடு,

"ஓ விசுவநாதம்! எங்கோத்திற்குச் சவ அடக்கம்? சரியாய் எட்டு......" என்பதற்குள் விசுவநாதன் "எட்டு மணிக்கு" என்றான்.

ஆனந்தஸிங் இப்போது சரியாய் ஏழரையாகிறது. புறப்படு சீக்கிரம். அடடா! நான் என்ன மூடனய்விட் டேன். என் புத்தி சாமார்த்தியமனைத்தும் மந்திரத்தால் கட்டுப்பட்ட மாதிரியிருந்தே விட்டதே. அட்டா-புறப்பட் டாயா சீக்கிரம்! சீக்கிரம்!! பிழைப்பதும் சாவதும் நம் துரி தத்தாலும் ஆலசியத்தாலு மிருக்கிறது. கடைசியில் கெடு தியாக முடிந்தால் என் மூட்டாள்தனத்தை நான் மன்னிக் கவே மாட்டேன்" என்றான்.

ஆனந்தஸிங்குக்குக் கடையில் இதன் உண்மை புலப் பட்டுவிட்டதென்றும், ஆனால் மிக்க ஆபத்தான விஷய மென்றும் விசுவநாதன் தெரிந்துகொண்டான். ஆயினும் அச்சமயம் ஒன்றும் கேட்கலாகாது. ஆதலின் துரிதமாய் உடை யணிந்துகொண்டான். ஆனந்தஸிங் அதற்குள் தன் உடைகளை யணிந்து ஓடிவந்து "சீக்கிரம் வா! துப்பாக்கி, கழி சீக்கிரம்" என்று கூறிக்கொண்டே துரிதமாய்

வீட்டை விட்டு வெளிப்பட்டான். விசுவநாதன் ஓடிப்போய் வீதியில் அவனோடு சேர்ந்துகொண்டான்.

ஐந்து நிமிடங்களுக்குள் இருவரும் ஒரு வண்டியில் ஏறிப்புறப்பட்டார்கள். ஆனந்தஸிங் சாரதியை நோக்கி "உயிர் ஆபத்து வண்டியை யதிவேகமாய்விடு. சீக்கிரம் சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன்" என்றான். பத்து நிமிடங்களுக்குள் வண்டி போலீஸ் ஸ்டேஷன் எதிரில் சென்று நின்றது. இடைவழியில் விசுவாநாதன் மெதுவாய் "ஆனந்தஸிங்! வாரன்ட்!" என்றான். ஆனந்தஸிங் "அதற்காக காத்திருக்க இது சமயமல்ல? காரியம் மிஞ்சி விடும். உயிரைக் காப்பாற்றுவதுதான் முதல் வேலை. கொலை நடக்க விட்டுவிட்டு இன்னொரு ஆளையும் பிடித்துத் தூக்கிற் போடுவது மூடத்தனம். அடடா! விசுவநாதம்! என் புத்தி எங்கே போயிருந்தது? உனக்கும் புத்தியிற் படாமற் போயிற்றே" என்றான்.

விசுவநாதன் "எனக்கு இன்னும் ஒன்றுமே விளங்க வில்லை" என்றான். ஆனந்தஸிங் "ஏன்? சவப் பெட்டிக் கடையில் அம்மாது, ஆலசிய மாய்விட்டது. ஆனால் அசா தாரணமான பெட்டி என்றாளல்லவா. நாம் நேரில் பார்த் தோமே. அப்பெட்டியில் இன்னொரு தேகம் வைக்க இட மிருக்கிறதல்லவா..." என்றான். அச்சமயம் தான் வண்டி ஸ்டேஷன் எதிரில் நின்றது.

ஆனந்தஸிங் கீழிறங்கியதும் உள்ளே போடி அங்கி ருந்த இன்ஸ்பெக்டரிடம் திடமான மூன்று ஆள்வேண் டும் விவரம் கூற இது சமயமல்ல. ஆலசியத்தால் காரியம் மிஞ்சிவிடும் என்றான். அச்சமயம் அவரவர்களுக்கு வேலை நியமிக்கும் காலமாதலால் யாவரு மங்கிருந்தார்கள். இரண் டொரு நிமிடங்களில் மூன்று போலீஸ்காரரோடு வந்து

வண்டியிலேறியதும் "பெரியக்கடை வீதிக்கு விடு சீக்கிரம்" என்றான்.

வண்டி அவ்வீதிக்குள் பிரவேசிக்கும் போது எட்டடித்துப் பத்து நிமிஷங்களாயின. தெய்வ சங்கல்பத்தால் சவப்பெட்டி வெளிக் கிளம்பவும் ஆலசியம் நேர்ந்தது.

வண்டி, கள்ளன் வீட்டின் முன் செல்லும்போதுதான் உள்ளே யிருந்து நான்கு பேர் சவப்பெட்டியைக் கஷ்டத்தோடு தூக்கிக்கொண்டு வெளியில் வருகிறார்கள். ஆனந்தலிங் வழியில் வரும்போதே போலீஸ்காரரில் இருவர் ஆகாசப்புரட்டனைக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்றும், விசுவநாதன் மற்றொரு போலீஸ்காரன் துணையோடு கள்ளன் மனைவியைக் கவனித்துக்கொள்ள வேண்டியதென்றும் ஏற்பாடு செய்திருந்தான்.

வண்டி வீட்டின் முன் நின்றதும் ஐவரும் பாய்ந்து கீழே குதித்தார்கள். ஆனந்தலிங் முன்னாலோடிப்போய்ச் சவப்பெட்டி வாயிற்படியை விட்டு வெளிவராதபடி தடுத்துப் பெட்டி சுமப்போரையதட்டி "அடே திரும்புங்கள்; சீக்கிரம் உள்ளேயே பெட்டியை வையுங்கள்" என்றான். குருவைப்போல் உடை யணிந்திருந்த ஆகாசப்புரட்டன் பெட்டியின் கூடவே வந்தவன் கோபத்தோடு ஆனந்தலிங்கை நோக்கி "எங்கே வாரன்ட்? என்று மறுபடி கேட்கிறேன்" என்றான்.

ஆனந்தலிங் சட்டென்று தன் ஜேபியிலிருந்த துப்பாக்கியைக் கையிலெடுத்துக்கொண்டு "வாரன்ட் வந்து கொண்டிருக்கிறது" என்றதும், கண் சமிக்கையால் இவன் தான் ஆசாமி யென்று காட்டிவிட்டான். ஆனந்தலிங்கின் கோர சொரூபத்தையும் துப்பாக்கியையும் கண்டதே பெட்டியைத் தூக்கிக்கொண்டிருந்த ஆட்கள் துரிதமாகத்

திரும்பி வீட்டிற்குள் பெட்டியை வைத்துவிட்டார்கள். கள்ளன் "ஓகோ காரியம் மிஞ்சிவிட்டதென்று" கண்டதே! துரிதமாய் வீட்டிற்குள் நடக்கத் தொடங்கினான். ஆனால் போலீஸார் இருவரும் சட்டென்று அவனை யோடாது தடுத்து "அய்யா! இங்கேயே நில்லும்" என்று கூறி அவன் இருபுறங்களிலும் நின்று கொண்டார்கள். விசுவநாதன் மற்ற போலீஸ்காரனோடு உள்ளே நுழைந்து கூடத்தி லிருந்து வந்துகொண்டிருந்த கள்ளன் மனைவியை யழைத்து வந்து ஒரு இடத்தில் நிறுத்தினான்.

ஆனந்தஸிங்கோ அததற்கு வேண்டிய ஆட்களை யமைத்துவிட்டபடியால் ஒன்றையும் கவனிக்கவில்லை. சவப் பெட்டி தூக்கும் ஆட்கள் பெட்டியைவைத்ததே தன் ஜேபி யிலிருந்த பணப்பையை யெடுத்து அவர்கள் முன்காட்டி, "அடே! ஒரு விநாடிக்குள் இப்பெட்டியைத் திறந்து விட் டால் ஒரு சவரன்" என்று அதிகாரத் தொனியோடு கூறி னான். அந்த ஆட்கள் உடனே திருப்புளிபோட்டுப் பெட்டி யின்மேல் முடுக்கியிருந்த மரையாணிகளைக் கழற்றத் தொடங்கினார்கள்.

ஆனந்தஸிங், "ஒருபக்கம் சுழற்றினாற்போதும்; பிறகு மேல்மூடியைத் தூக்கி யுடையுங்கள்- ஆ! இரண்டாணி வந்தன- இன்னும் இரண்டாணி- அடே! நீ பக்க ஆணிக ளைக் கழற்று சிக்கிரம் சிக்கிரம்" என்று துடிதுடித்தான். ஒருபக்க ஆணிகளும், குறுக்குப்பக்கம் இருக்கும் ஆணி களும் கழற்றப்பட்டதும் ஆனந்தஸிங் பட்டென்று மேல் பலகையைப் பிடித்து வளைத்து ஒடித்துவிட்டான்.

உள்ளிருந்து குபீலென்றும் மரணத்தைப்போல் மூர்ச் சையுண்டாக்கும் (குளோராபாரம் என்ற) மருந்தின் நாற்றம் வெளிவந்தது. ஆனந்தஸிங் பெட்டியின் மேல்பக்கம் நிரப் பப்பட்டிருந்த பஞ்சுகளைத் துரிதமாய்வெளியிலெடுத்தான்.

அப்பஞ்சுகளிலெல்லாம் அம்மருந்து ஊற்றப்பட்டிருந்தது. அவற்றை யெடுத்ததே கற்பகம் சீமாட்டியின் முகம் தெரிந்தது. அம்முகம் மிக்க பயங்காமான மாறுதலடைந்திருந்தது. ஆனந்தஸிங் சட்டென்று அவளைத் தூக்கி, "ஓ விஸ்வநாதம்! உயிரிருக்கிறதா பார்! பார்!!" என்று கூவினன். விஸ்வநாதன் "நான் இம்மாதிடம் இருக்கிறேன்" என்றான்.

ஆனந்தஸிங் ஆத்திரத்தோடு, "ஓ! இருவர்க்கும் விலங்கிடுங்கள்; ஓட முயன்றால் சுடுங்கள்" என்றான். உடனே இருவர்க்கும் விலங்கிடப்பட்டது.

சுமார் அரைமணிநேரம் வரையில் கற்பகம் செத்தவள் போலவே தோன்றினாள். கடைசியில் மெதுவாய்ச் சுவாசம் வரத்தொடங்கியது. அச்சமயந்தான் கனம் பச்சையப்பனும் இன்ஸ்பெக்டர் இலக்ஷ்மணஸிங்கும் வானோடு அங்கு வந்தார்கள். ஆனந்தஸிங் அவர்களைக்கண்டதும் மிக்க சந்தோஷமடைந்து, "ஆ! சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள். விஸ்வநாதம்! கற்பம் சீமாட்டியை இனி நாம் நியாயப்படி கனம் பச்சையப்பனிடம் நம்பகத்தோடு விட்டுவிடலாம். நாம் இந்த வீடுமுழுமையும் சரியாய்ச் சோதனை செய்யுமட்டும்" என்றான்.

அவ்வாறே கற்பகத்தைப் பச்சை யப்பனிடம் விட்டு, இலக்ஷ்மணஸிங் வசம் ஆகாசப் புரட்டனையும், அவன் மனைவியையும் ஒப்பித்து விட்டு, ஆனந்தஸிங் விசுவநாதனை யழைத்துக்கொண்டு வீடு முழுமையும் சோதனை செய்யத் தொடங்கினன். இலக்ஷ்மணஸிங், குற்றவாளிகளிருவரையும் தன் ஆட்களிடம் ஒப்பித்து விட்டு ஆனந்தஸிங் பின்னால் சென்றான்:—

இவர்கள் மேல் மாடியில் போய்ச் சோதனை செய்தபோது அச்சண்டாளர்கள் கற்பகம் சீமாட்டியைச் சிறைவைத்திருந்த அறையைக் கண்டார்கள். ஒரு மணி நேரத்திற்

குள் கற்பகச்சிமாட்டி செய்யப்பட்ட சிகிச்சையால் சுமாராகச் சுகமடைந்தாள். பிறகு அவளை நிதானமாக விசாரித்தபோது அவள் பின் வருமாறு கூறினுள்.

"நான் கனம்-பச்சையப்பரை என்பாலிய வயதிலேயே கண்டிருக்கிறேன். அந்தஸ்து செல்வம் முதலியவற்றில் அவர், நான் மணம்செய்து கொள்ளத் தக்கவரே. ஆனுல், அவர் தமது பாலிய காலத்தை யெல்லாம் முரட்டுத்தனமான நாட்டில் செலவழித்ததால் அவர் நடக்கைகளும் அவ்வாறே யாயின. ஒருநாள் அவர் தன் நடக்கைகளைப் பற்றிக் களங்கமின்றிக் கூறியபோது எனக்கு 'அவர்மேலிருந்த அபிமானம்மாறி அச்சமும் வெறுப்பு முண்டாய் விட்டன. அதை யறிந்ததே அவர் நாட்டைவிட்டுப் போய் விட்டார்.

இடையில் காலங்கழிந்தது. நான் உண்மையில் அவர் மேல் மனப்பூர்வமான காதல் கொண்டிருந்தேன். ஆகையால் என் அன்பை யின்னெருவர்க் களிக்க என் மனம் ஒப்ப வில்லை. நான் இதுகாறும் மணமின்றி யிருப்பதற்கு இதே காரணம், என் வாழ்நாட்களில் எனக்குச் சுகமேயில்லை. மனதில் வியாகூலமிருக்கையில் எப்படி நிம்மதியுண்டாகும்?

இவ்வாறிருக்கையில் நான் புது ஊர்களைப் பார்த்துக் கொண்டே சென்றுல் மனதிற்கு ஒருவித நிம்மதியாவதுண்டாகும் என்று கருதி இலவனூருக்குச் சென்றேன். அங்கிருக்கையில் ஒருநாள் ஏரியோரத்தில் உலவிக்கொண்டிருக்கையில் திடீலென்று இவர் வந்து என்னைச் சந்தித்தார்- சந்தித்தபோது ஆவலோடு பாய்ந்துவந்து என் கரத்தை முரட்டுத்தனமாய்ப் பிடித்துப் பற்றினுர். நான் திடுக்கிட்டு பீதியடைந்து விழித்தேன். ஏனெனில் இவர் கோரமான முரட்டு உருவத்தைக் கண்டதே யிவர் யாரென்று எனக்குத் தெரியவில்லை.

அச்சமயம் என் தோழியாகிய தெய்வநாயகி, நாங்கள் சந்தித்ததைப் பார்த்தாள். பிறகு அவர் என்னை ஹோட்டலில் வந்து கண்டு தமது பழைய காதல் விஷயத்தைப்பற்றிக் கூறித் தம்மை மணம் புரியும்படி வேண்டிக்கொண்டார். எனக்கோ மனம் ஒப்பவில்லை. இவரோ சாவதானமாக ஆலோசிக்கக்கூட இடந்தா மாட்டேனென்றார். ஆகையால் நாம் முன்னே இவர் கண்ணுக்குப் புலப்படாமல் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று கருதி அங்கிருந்து பட்டூருக்குப் போய்விட்டேன்.

பட்டூரில் இந்த சேஷப்பன் என்ற குருவையும் இவன் மனைவியையும் சந்தித்தேன். இவர்கள் செய்த மாயாஜாலங்கள் - அய்யோ கடவுளே! சொல்ல முடியாது. நான் அடியோடு மோசம் போய்விட்டேன். எனக்கு நேரிடும் செலவிற்காக நான் பணம் கொடுக்கப் போகும்போதெல்லாம் இக்கள்ளக் குருவாகிய துரோகி "குழந்தாய்! எங்களிடம் எங்கள் தேவைக்கு அதிகமான பொருளை யாண்டவனளித்திருக்கிறார். உன் போன்றவர்களுக்குச் செலவு செய்யாமல் நான் அதை யென் செய்வது?" என்று மிக்க சாமார்த்தியமான-நயவஞ்சகமான மொழிகளாலும் நடக்கைகளாலும் என்னைப் பூரணமாய் மயங்கச் செய்துவிட்டான். இனி நடந்த விஷயங்களைச் சுருக்கமாய்க் கூறிவிடுகிறேன்.

இச்சண்டாளர்களை மகா உத்தமர்களென்று நான் நம்பிக்கொண்டு, நமது தோழியைக்கூட அனுப்பிவிட்டு நாம் இவர்களோடு இரத்னபுரிக்கு வந்துவிட்டால் நமது காதலர் நம்மைக் கண்டுபிடிக்க முடியாதென்று கருதினேன். அதோடு என் தோழி மணம் புரிய ஏற்பாடு செய்து கொண்டதால் இதே சாக்காய் அவளை யனுப்பி விட்டேன். அவளுக்குக் கலியாணத்திற்குப் பரிசாக ஐம்பது பவுனுக்கு ஒரு உண்டி யளித்துவிட்டேன். கடைசியில் பட்டூரை

விட்டு இந்நகரம் வந்து சேர்ந்தேன். ஓ கடவுளே! இங்கு வந்து சேர்ந்தவுடனே இவர்கள் தங்கள் சுயகுணத்தைக் காட்டி விட்டார்கள்.

இங்குவந்த தினமே ஒரு தொழிற்சாலையில் வியாதியுற்றிருந்த ஒரு கிழவியைத் தாங்கள் காப்பாற்றுவதாக அழைத்து வந்தார்கள். அப்படி நடந்துகொண்டது என்னை யேமாற்றவே. அடுத்தநாள் நான் இங்கு வந்திருப்பதைப்பற்றித் தங்கம்மாளுக்கும் தெய்வநாயகிக்கும் கடிதங்கள் எழுதித் தபாலில் போடப் புறப்பட்டேன். அப்போது இக்கள்ளன் மனைவி "அய்யோ குழந்தாய்! தனியாய் வெளியில் செல்லவேண்டாம்; நான் இக்கடிதங்களைக் கொண்டுபோய்த் தபாலில் போடுகிறேன்" என்று கடிதங்களை வாங்கிக்கொண்டாள். அப்போதும் எனக்கு ஐயம் சற்று முண்டாகவில்லை.

மறுநாள் நான் கடைவீதிக்குச் செல்லப் புறப்பட்ட போது இக்கள்ளி தடுத்தாள். அப்போதுதான் எனக்குச் சந்தேகம் ஜனித்தது. ஆயினும் சொல்ப சந்தேகமே. நான் கோபமடைந்து அதை யவள் கணவனிடம் கூறினேன். அவன் நயவஞ்சகமாய், "குழந்தாய்! அவள் கபட மற்றவள்; உள் அறைக்கு வா நான் ஒரு சங்கதி கூறுகிறேன்" என்று என்னை மேல் மாடியிலுள்ள என் சயன அறைக்கு அழைத்துச் சென்று "இதோ பார் இதிலுள்ள சாளரம் எந்தப்பக்கம் இருக்கிறது பார்" என்றான்.

நான் அவ்வாறே நோக்கியபோது அச் சாளரம் பின் பக்கம் உள்ள அகன்ற தோட்டத்தைப் பார்த்தது போலிருக்கிறதென்று தெரிந்தது.

அச் சண்டாளன் "ஓ கற்பகம்! நீ விருதாவாய் முணமுணப்பதில் பயனில்லை. இனி நீ இந்த அறையை விட்டு என் அனுமதியின்றி வெளி வாலாகாது. தெரிகிறதா. இங்

இருந்து நீ உன் தொண்டை கிழிந்து போகுமட்டும் கூச்ச லிட்டாலும் ஒருவர்க்கும் கேட்காது." என்று கூறிவிட்டுத் துரிதமாய்ப் பாய்ந்து சென்று கதவை மூடிப் பூட்டிக் கொண்டு போய் விட்டான். அப்போது தான் " 'ஓ கோ! நாம் பெரிய ஆபத்தில் மூடத்தனமாகச் சிக்கிக் கொண் டோம் என்று' " என் புத்தியிற்பட்டு விட்டது" என்று கூறி ஆயாசத்தால் சற்று நேரம் பேசாமலிருந்தாள்.

5-வது அத்தியாயம்

கற்பகச்சிமாட்டி சற்று நேரங் கழித்து மறுபடி கூறத் தொடங்கி "அன்று முதல் என் திகில் அதிகமாய் விட்டது. அது முதல் எனக்கு ஆகாரம் அவர்கள் இருவருக் கொண்டுவந்து வைக்கத் தொடங்கினர்கள். மறு நாள் இரவு என் ஆகாரத்தில் ஏதோ மயக்கமருந்து சேர்க்கப் பட்டதால் நான் சற்றும் ஸ்மரணையின்றிக் காலை ஒன்பது மணிக்குத்தான் எழுந்தேன். அப்போதும் எனம்கு மயக் கம் அதிகமாக இருந்ததால் என் பெட்டியிலிருந்த முகரும் உப்பை யெடுக்கப் பெட்டியைத் திறக்க முயன்றேன். அந்தோ! என் பெட்டியின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே பார்த்தபோது நான் வைத்துக்கொண்டிருந்த அருமையான நகைகளெல்லாம் போய்விட்டன. அதை யறிந்ததே யென் ஆவி சோர்ந்துவிட்டது.

அதுமுதல் நான்பட்ட கஷ்டம் கடவுளுக்கே தெரியும் முடிவைக் கூறுகிறேன். இன்று காலை சுமார் ஆறுமணிக்குக் கணவன் மனைவியாகிய இரண்டு சண்டாளர்களும் என் அறைக்குவந்து என் முகத்தில் ஏதோ மருந்தைக் காட்டி னர்கள். சற்றுநேரத்திற்குள் என் ஸ்மரணை போய்விட்டது.

அதன்பின் என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது" என்று முடித்தாள்.

வீடு முழுமையும் சோதனை செய்தபோது கள்ளன் பெட்டியில் இருந்து சுமார் ஐம்பதாயிரம் பவுன் பெறுமான இரத்தினங்களும் நகைகளும் அகப்பட்டன. அவையாவும் கற்பகம் சீமாட்டி யுடையனவே. ஆகாசப்புரட்டனும், அவன் மனைவியும் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அவர்கள் குரூரமாய் அதாவது கத்தி, துப்பாக்கி முதலிய வற்றால் கொலைசெய்தால் அத்தாட்சிகள் ஏற்படுமென்றே மயக்க மருந்து கொடுத்துவிட்டுச் சவப்பெட்டியில் வைத்துப் புதைத்துவிடக் கருதினார்கள்.

விசாரணையில் யாவும் சுலபமாகவே ஐயமற ருஜு வாயின. ஆகையால் இருவர்க்கும் தீபாந்தரவாச தண்டனை விதிக்கப்பட்டது. ஆனந்தஸிங் முதலியவர்கள் வேண்டுகோளின்படி கற்பகம் சீமாட்டி கடைசியில் கனம் பச்சையப்பனையே மணம் புரிந்துகொண்டாள். அவன் தன் முரட்டுத்தனங்களை யடியோடு விட்டொழித்தான்.

மாயச் சம்பவங்கள்.

1-வது அத்தியாயம்.

ஆனந்தஸிங் சதா மிக்க மர்மமான குற்றங்களையும் பரம துஷ்டர்களாகிய குற்றவாளிகளையும் கண்டு பிடிப்பதில் தன் மூளைக்கும் தேகத்திற்கும் அளவுகடந்த வேலை வைத்துக்கொண்டிருந்தபடியால் அவன் தேகம் பலஹீனமும் அசௌக்கியமும் அடையத் தொடங்கியது. சாதாரண சிகிச்சைகளால் ஒரு அனுகூலமும் உண்டாகவில்லை.

விசுவநாதன் தன்னாலானவரையில் பார்த்து கடைசியில் பிரபல வைத்தியரான மார்க்கசேனர் என்பவரை யழைத்து வந்து காட்டினான். அவர் ஆனந்தலிங்கின் தேகத்தை மிக்க எச்சரிக்கையோடு சோதித்துப் பார்த்துக் கடைசியில் "இப்போது விசுவநாதன் கொடுத்துவரும் ஔஷதமே குணப்படுத்திவிடும். ஆனால் நீ இங்கிருக்கலாகாது. கொஞ்சகாலம் நீ இதுகாறும் தொழில் செய்துகொண்டிருந்த இடங்களை யடியோடு விட்டுவிட்டுத் தூரத்திலுள்ள மலைப் பிரதேசங்களிற்சென்று வசித்துக்கொண்டிருக்கவேண்டும். நிம்மதியாய்-முழுதும் நிம்மதியாய் இருக்கவேண்டும். தென்மேற்கில் கடலோரத்தில் சென்றிருப்பது மிக்க நலம். அப்படிக்கின்றி இப்போது தொழில்செய்யத் தொடங்கினால் பிறகு எப்போதுமே வேலைக்கு உதவாத நிலைமையை யடைவாய்" என்று கூறினார்.

அவ்வாறே ஆனந்தலிங்கும் விசுவநாதனும் பள்ளூர் விரிகுடாவின் அருகிலுள்ள ஒரு சிறு கிராமத்திற்குச் சென்று ஒரு தனி வீட்டில் வசிக்கத்தொடங்கினார்கள். அப்பிரதேசம் குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் காணாறுகளும், அடவிகளும் நிறைந்த இடம். எங்கோ ஒவ்வொரு இடத்தில் சிறு சிறு கிராமங்களுண்டு. அங்குள்ள சிறிய விரிகுடாவின் கரையில் சதா மோதப்படும் பாறைகளும் குத்துக் கற்களும் நிறைந்துள்ளன. மேல்காற்று மும்முரமாய் வீசும்போது அந்த விரிகுடா கப்பல்கள் அடைக்கலம் புகத் தகுதியான இடமாக விருக்கும். ஆனால் கப்பல்கள் அங்கு தங்கியிருக்கையில் திடீலென்று மேல் காற்று தென்மேற்குக் காற்றாய்விட்டாலோ அக்கப்பல்கள் பாறையில் மோதப்பட்டு அழியவேண்டியதே. அந்தக்கரையில் எண்ணிறந்த கப்பல்கள் சேதமடைந்தன. எண்ணிறந்த மனிதர் அங்கு முழுகி இறந்தார்கள். ஆகையால் புத்தியுள்ள மாலுமி

எவனும் தன் கப்பலை யக்குடாவிற்குள் கொண்டுபோக மாட்டான்.

கடலின் விஷயம் அவ்வாருயின் உள் நாடும் பள்ளத் தாக்குகளும் அடவிகளும் நிறைந்ததே. கிராமம் உள்ள இடத்தில் எங்கோ ஒவ்வொரு கோயிற் சிகரம் தெரியும். இவர்கள் வசிக்குமிடத்திற் கருகில் இருந்த கிராமத்திற்கு தானம்பட்டி என்று பெயர். அதில் சுமார் இருநூறு வீடு களே யுண்டு. அங்குள்ள குருவுக்கு ஞானரத்னம் என்று பெயர். அவர் பூர்வீக சிலா சாசனங்களைப்பற்றி யாராய்ச்சி செய்யும் பிரியமுடையவர். அதனுல் ஆனந்தஸிங் அப் போதைக் கப்போது அவரிடம் சென்று சம்பாஷித்துக் கொண்டிருப்பதுண்டு. அவர் நடு வயதுடையவர். அப் பிரதேச விவகாரங்களை நன்கறிந்தவர். பிரியமாய்ப் பேசு பவர்.

அவர் வசிக்கும் வீடு மிக்க விசாலமானது. அவரோ பிரம்மச்சாரி. ஆகையால் தமது வீட்டில் தங்கவேல் என்ற ஒரு தனியாளுக்கு இடம் விட்டிருந்தார். தமது சொல்ப வருமானத்திற்குத் தங்கவேல் பிள்ளை கொடுக்கும் வாட கைப்பணம் கொஞ்சம் உதவியாக விருந்தது. ஆனந்தஸிங் கும் விசுவநாதனும் குருவைக்காணப்போகும்போது இந்தத் தங்கவேலையும் அங்கு கண்டு பேசுவதுண்டு. ஆனுல் குரு வுக்கும் தங்கவேலுக்கும் வேறு எவ்விதமான சம்பந்தமு மில்லை. குரு மிக்க தாராளமாய்ப் பேசுபவர். தங்கவேல் பிள்ளை யென்பவனே அதிகமாய்ப் பேசுகிறவனல்ல. ஒரு வித சுளித்தமுக முடையவன். எப்போதும் குனிந்தபடி யேதோ சிந்தனையிலிருப்பவன்.

ஆனந்தஸிங் விசேஷமாய் அங்குள்ள கடல் மலை காடு முதலிய காட்சிகளைக் காண்பதில் நெடுநேரத்தைச் செல வழிப்பது வழக்கம். ஒரு நாள் காலை ஆனந்தஸிங்கும் விசுவ

நாதனும் காலைப்போஜனம் செய்தபின் முன் அறையில் உட்கார்ந்து சுருட்டுப் பிடித்துக்கொண் டிருந்தார்கள். அச் சமயம் கதவு ஆத்திரத்தோடு திறக்கப்பட்டதும் ஞானரத் னம் குருவும் தங்கவேல் பிள்ளையும் உள்ளே வந்தார்கள். அவர்கள் முகத்தால் அவர்கள் மனதில் மிக்க கலவரமும் துடிப்புமுடையவர்களாக வந்திருக்கிறார்கள் என்று புலப் பட்டது.

உள்ளே வந்ததும் குரு "ஓ ஆனந்தஸிங்! மிக்க ஆச் சரியமும் பயங்கரமும் கோரமுமான சங்கதி இரவு நடந்தி ருக்கிறது. அப்படிப்பட்ட சம்பவத்தை யிதுகாறும் கேட்டே யிருக்கமாட்டாய்; இச்சமயம் நீ இந்த இடத்தில் வந்திருப்பது உண்மையில் தெய்வ சங்கல்பமே யென்று நம்புகிறேன். சந்தேகமேயில்லை. ஏனெனில் இச்சமயத்தில் உன்னை யன்றி இத்தகைய விஷயத்தைக் கண்டறியக் கூடியவன் வேறு எவனும் நமது நாட்டிலில்லை" என்றார்.

விசுவநாதன் சற்று கோபத்தோடும் வெறுப்போடும் குருவை நோக்கினான். ஏனெனில் ஆனந்தஸிங் மனக்கலக்க மடையாமல்-ஆழ்ந்த சிந்தனையால் மூளைக்குக் கஷ்டமான வேலை வைக்காமல் முழு நிம்மதியோடிருக்க வேண்டுமென் பது விசுவநாதன் எண்ணம். அந்த எண்ணத்தோடேயே யவர்கள் அங்கு வந்திருப்பது. இப்போது இக்குரு அதைக் கெடுத்து ஆனந்தஸிங்குக்கு ஏதோ வேலை வைப்பார்போல் தோன்றியது.

ஆனந்தஸிங் மிக்க ஆத்திரத்தோடும் கலவரத்தோடும் நின்றபடியேபேசிய ஞானரத்தினம் குருவையும் தங்கவேலை யும் நோக்கி, "உட்காருங்கள் உட்காருங்கள். மனதைச் சற்று சாந்தம் செய்துகொள்ளுங்கள்" என்று அங்கிருந்த சோபாவைச் சுட்டிக்காட்டினான்.

உடனே இருவரும் உட்கார்ந்தார்கள். தங்கவேல் என்ப

வன் குருவைக்காட்டிலும் மன அடக்கம் அதிகமாகவே யுடையவனாகக் காணப்பட்டான். ஆயினும் அவன் கரங்களை நெறித்துக்கொண்டதையும் உதடுகளை யழுத்திக்கொண்டதையும், அவன் கண்களிலுண்டான ஒருவித தீட்சணியமான பிரகாசத்தையும் நோக்கும்போது அவன் மனம் மிகத் துடித்துக்கொண்டு ஆத்திரத்திலிருக்கிறதென்று நன்கு விளங்கும். இருவரும் ஆசனத்தில் ஒருவர்பக்கம் ஒருவராக வுட்கார்ந்ததும் தங்கவேல் குருவை நோக்கி, "சங்கதியை நான் கூறட்டுமா அல்லது தாங்களே கூறுகிறீர்களோ?" என்று கேட்டான்.

குரு அவனுக்கு விடையளிப்பதற்குள் ஆனந்தஸிங் தங்கவேல்பிள்ளையை நோக்கி, "ஏன்? ஆச்சரியசம்பவமோ பயங்காசம்பவமோ, எதுவோ அதை முதலில் கண்டறிந்தவர் தாங்களே யாதலாலும், குரு அவர்கள் தங்கள் மூலமாக இரண்டாவதாகவே கேள்விப்பட்டதாலும் தாங்களே முதலில் நடந்த சம்பவத்தைக் கூறலாமே" என்றான்.

இதைக்கேட்டதே வந்த ஆசாமிகள் இருவரும் திப்பிரமையடைந்து விட்டார்கள். முதலில் கண்டவர் இன்னாரென்று ஒருவரும் கூறாமலே இவன் எப்படி யறிந்துகொண்டானென்று அவர்களுக்குப் பெரும் வியப்பாகிவிட்டது. ஆனால் விசுவநாதனுக்கு ஆனந்தஸிங் வெளித்தோற்றங்களைக் கண்டு விஷயங்களைக் கிரகிக்கிறவழி யெவ்வாறென்று சற்று தெரியும். ஆகையால் அவன் வந்தவர்களை யுற்று நோக்கியபோது குரு மிக்க அவசரமாய் உடையணிந்து வந்திருக்கிறாரென்றும், தங்கவேல்பிள்ளை நிதானமாக உடையணிந்திருக்கிறானென்றும் தோன்றியதால் அவனே முன்னாடி வெளியில் புறப்பட்டுச்சென்று எதையோ கண்டபின் குருவை யழைத்துவந்தானென்று ஆனந்தஸிங் அறிந்துகொண்டானென்று உணர்ந்தான்.

ஆனந்தலிங், தங்கவேலை, முன்னுடிக் கூறும்படி யியம்பியபோது குரு, "ஆயினும் நானே முன்னுடி நடந்த விஷயத்தைக் கூறிவிடுகிறேன். பிறகு உனக்கு அவசியமாகத் தோன்றினல் தங்கவேல்பிள்ளை கூறும் விவரங்களைக் கேட்கலாம். இன்றேல் உடனே விவகாரம் நடந்த இடத்திற்குச் செல்லலாமென்று உனக்குப் புலப்பட்டால் அவ்வாறே செய்யலாம்" என்றார்.

ஆனந்தலிங், "அப்படியானல் தாங்களே கூறுங்கள்" என்றான். அதன்மேல் குரு பின்வருமாறு கூறினர்:—

"எனது நண்பர் நேற்று இரவு, சமீபத்தில் நமது கிராமத்திற்கு வெளியில் புதுமாளிகை யென்ற வீட்டில் வசிக்கும் தமது சகோதர சகோதரிகளோடு விருந்துண்ணச் சென்றிருந்தார். இவருக்கு வேதாசலம், ஜம்புசாமி என்ற இரண்டு சகோதரர்களும், பங்கஜம் என்ற ஒரு சகோதரியுமுண்டு. இவரும் அவர்களும் போஜனமுண்டு முடிந்தபின் இவருடைய சகோதரர்கள் வேடிக்கையாகச் சீட்டாடலாமென்று கூறவும் அவர்களோடு நெடுநேரம் சீட்டாடிக் கொண்டிருந்துவிட்டு வந்துவிட்டார். இவர் அவர்களை விட்டுப் பிரியும்போது அவர்கள் மூவரும் சந்தோஷமாகவும் பூரணசுகத்தோடுமே யிருந்திருக்கிறார்கள். எவ்வித கலக்கமுமில்லை.

தங்கவேல் பிள்ளை அதிகாலையில் துயிலெழுபவர். அவர் மறுநாட் காலை யெழுந்ததும், காலைப்போஜனத்திற்கு முன் வெளியில் உலவப்போனவர் அதேயிடத்தை நோக்கிச் சென்றார். கொஞ்சதூரம் செல்லும்போது பின்பக்கமிருந்து வந்த இராஜசிங்கம் என்ற வைத்தியரைச் சந்தித்தான். அவர் இவரைக் கண்டதும் "புதுமாளிகையில் என்னை மிக்க அவசரமாக வரும்படி சமாசாரம் வந்தது"

என்றார். தங்கவேல் பிள்ளை அவர் வண்டியிலேயே யேறிக் கொண்டு சென்றார்.

இவர்கள் அவ்வீட்டிற்குள் சென்றதும் அங்கு இவர்கள் கண்டகாட்சி மிக்க பயங்காமானது. தங்கவேல் பிள்ளையின் சகோதரர்களும் சகோதரியும் இரவு அவர்களை இவர் எந்த விடத்தில் விட்டு வந்தாரோ அந்த விடத்திலேயே யிருந்தார்கள். சீட்டுகள் எதிரில் மேஜைமேல் அப்படியப் படியே வைக்கப்பட் டிருந்தன. தீபங்கள் எரிந்து அணைந்துபோ யிருந்தன. அவர் சகோதரி நாற்காலியின்மேல் இறந்துபோய் இருந்தாள். அவள் சிரம் நாற்காலியின் கையின்மேல் தொங்கிக்கொண் டிருந்தது. இரண்டு சகோதார்களும் கை தட்டிக்கொண்டு, சத்தத்தோடு பாடிக்கொண்டும் நகைத்துக்கொண்டு மிருந்தார்கள். அவர்கள் புத்தி சுயாதீனம் அடியோடு போய்விட்டது. இருவரும் பேய்கள்போல் வெறிகொண்டு விட்டார்கள். அவர்கள் மூவர் முகங்களிலும் சொல்லொணாத பெரும் பீதியடைந்த குறியிருந்தது. சகிக்க முடியாத பயத்தால் வலிப்பு வந்தவர்கள் போல் காணப்பட்டார்கள்.

வீட்டில் அன்னியர் ஒருவருமில்லை. வந்ததாகவும் தெரியவில்லை. சமையல் செய்பவளும் வீட்டுக்காரியங்களைக் கவனிப்பவளுமாகிய பொன்னுச்சி என்பவள் மட்டுமேயிருக்கிறாள். அவளைக் கேட்டால் அவள் தான் நன்றாக நித்திரைபோய் விட்டதாகவும் தனக்கு ஒரு சங்கதியும் தெரியாதென்றும் கூறினாள். அவள் விஷயத்தில் சந்தேகம்கொள்ள எள்ளளவு காரணமுமில்லை. வீட்டிலிருந்து ஒரு வஸ்துகூடக் களவுபோகவில்லை. அங்கிருந்த வஸ்துக்களெல்லாம் அவற்றினிடத்தில் வைத்தது வைத்தபடி யிருந்தன. வெளியிலிருந்து யாரேனும் உள்ளே வந்ததாய் ஒரு அடையாளமுமில்லை. ஒரு மாது பயத்தால் மடியக் கூடிய

தும், தைரியசாலிகளும் பலசாலிகளுமாகிய இரண்டு ஆடவர்கள் பயத்தால் வெறி கொள்ளக் கூடியதுமான அத்தகைய பயங்கர சம்பவம் என்ன நேர்ந்திருக்கும் என்பதைக் காட்ட எள்ளளவு அத்தாட்சியுமில்லை. ஆனந்தலிங் யார் கூறினாலும் முடிவில் இருக்கிற விஷயம் இதுவே. இதைமட்டும் நீ கண்டு பிடித்துவிட்டால் ஒரு பெரிய காரியத்தைச் செய்த கீர்த்தி யுனக்குக் கிடைக்கும்" என்றார்.

குரு கூறி முடிந்ததும் விசுவநாதன் இதற்கு எப்படியாவது சாக்குக்கூறி ஆனந்தலிங் இதில் பிரவேசிக்க ஒட்டாமற் செய்து அவனை நிம்மதியாகவே யிருக்கச் செய்யலாம் என்று கருதினன். ஆனல் அந்த எண்ணத்தோடு அவன் ஆனந்தலிங் முகத்தை நோக்கியபோது "ஓகோ! இக்காரியம் நம்மால் முடியாது" என்று அவனுக்குப் புலப்பட்டு விட்டது.

ஏனெனில் ஆனந்தலிங் கிழவயதடைந்து சும்மா வீட்டிலிருக்கும் வேட்டைநாய் வேட்டையில் நாய்களை யேவும் சத்தத்தைக் கேட்டதே எப்படித் துள்ளியெழுந்து செவிகளை நிமிர்த்திக்கொண்டு வாலைக் கிளப்பிக்கொண்டு ஆவலோடு நோக்குமோ அவ்வாறே ஆனந்தலிங் ஞானரத்னம் குரு கூறியயாவும் கேட்டதும் அவன்கண்களில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. அவன் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தான். அதன்பின் அவன் வாயிலிருந்த தன் சுங்கானை மேஜைமேல் வைத்துவிட்டு இரண்டு நிமிடங்கள் கண்களை மூடிக்கொண்டு சிந்தனையிலிருந்து "சரி நான் இதைக் கண்டறிய முயல்கிறேன். இது ஆரம்பத்தில் நோக்கினல் மிக்க அபூர்வமான சம்பவமாகத் தோன்றுகிறது. என் சுவாமி! தாங்கள் அந்த விடத்தைப் போய்ப் பார்வையிட்டீர்களோ?" என்று குருவைக் கேட்டான்.

ஞானரத்னம் குரு:--"நான் ஒன்றுமே கண்ணால் காணவில்லை. நமது நண்பர் கூறியதையே கேட்டேன். உடனே முன்னே உன்னிடம் இதைக் கூறவேண்டியதுதான் சரி என்று இவரை யிங்கழைத்துவந்தேன்" என்றார்.

ஆனந்த:—"தங்கள் வாசஸ்தலத்திற்கும் இந்த அபூர்வமான கோரசம்பவம் நேர்ந்த விடத்திற்கும் எவ்வளவுதூர மிருக்கும்?" என்றான்.

குரு, "சுமார் ஒருமைல் தூரமே யிருக்கு" மென்றார். ஆனந்தஸிங் "அப்படியாயின் நாம் அங்கு செல்வோம். ஆயினும் இங்கிருந்து புறப்படுமுன் நமது தங்கவேல் பிள்ளையை நான் இரண்டொரு கேள்விகள் கேட்க விரும்புகிறேன்" என்றான்.

தங்கவேல் பிள்ளை இதுவரையில் பேசாமலே யிருந்தாலும் அவன் மனம் மிக்க பதை பதைப்போடும் கலக்கத்துடனும் ஆத்திரத்தோடு மிருந்தது. அவன் வெளுத்த முகத்தோடு ஆனந்தஸிங் முகத்தையே யுற்று நோக்கிக்கொண்டிருந்தான். அவன் கரங்களை நெறித்துக் கொண்டிருந்தான். அவன்உதடுகள் துடித்துக்கொண்டிருந்தன. அவன் ஆனந்தஸிங்கை நோக்கி,

"ஆனந்தஸிங்! என்னை என்ன கேள்விகேட்டாலும் கேள். இது மிக்க துக்ககரமான சம்பவமாயினும் எனக்குத் தெரிந்த உண்மையை நான் கூறுகிறேன்" என்றான்.

ஆனந்த:—"ஒன்றுமில்லை. இரவு நடந்த சங்கதியைக்கூறும்" என்றான்.

தங்கவேல்பிள்ளை:—எனது நண்பர் கூறியபடி நான் அங்கு போஜனத்திற்குச் சென்றேன். யாவரும் சந்தோஷமாகவே உற்சாகத்தோடு போஜனம் செய்தோம். போஜனம் முடிந்தபின் என் மூத்த சகோதரனாகிய ஜம்புசாமி "தம்பி சற்றுநேரம் சீட்டு விளையாடலாம்"

என்றான். நான் அவ்வாறே சம்மதித்துச் சுமார் பத்தேகால் மணிவரையில் ஆடியபின் அங்கிருந்து விடை பெற்றுத் திரும்பி வந்துவிட்டேன். அப்போது அவர்கள் சந்தோஷமாகவே யிருந்தார்கள்.

ஆனந்த:—உனக்குக் கதவைத்திறந்து உன்னை வெளியில் அனுப்பியவர் யார்?

தங்க:—"சமையற்காரியாகிய பொன்னுச்சி நித்திரைக்குப் போய்விட்டாள். ஆகையால் நானே கதவைத் திறந்து கொண்டு மறுபடி மூடிவிட்டு வந்துவிட்டேன். அந்த அறையிலிருந்த சாளரத்தின் கதவும் மூடப்பட்டிருந்தது. ஆனால் திரைமட்டும் விடப்பட்டிருக்கவில்லை. காலையில் நான் சென்றபோது கதவு சாளரம் யாவும் நேற்று நான் விட்டிருந்தபடியே யிருந்தன. ஒரு வித்தியாசமுமில்லை. புதுமனிதர் யாரேனும் உள்ளே வந்ததாக ஒரு அறிகுறியுமில்லை. அப்படி யிருந்தும் என் சகோதரி பயத்தால் இறந்து வெறித்துச் சவமாயிருக்கிறாள். இரண்டு சகோதரர்களும் பைத்தியம் பிடித்து அகோரமான நிலைமையிலிருக்கிறார்கள். அந்தோ! அக்கோரக்காட்சியைக்கண்டு என் மனம் சகிக்கவில்லை. என் உயிர் நீங்குமட்டுமே அக்காட்சியை நான் ஒரு விநாடியேனும் மறக்கமுடியாது" என்றான்.

ஆனந்த:—இப்போது நீ கூறுகிறபடி இச்சம்பவம் மிக்க அபூர்வமானதே. உனக்குத் தோற்றுகிற வரையில் இதைப்பற்றி எத்தகைய காரணமும் உனக்குப் புலப்படவில்லையோ?

தங்க:—ஆனந்தஸிங்! இது பேயின் செயலே. ஆம் பேயின் செயலே. இது இவ்வுலக சம்பந்தமானதேயல்ல. அந்த

அறைக்குள் மனிதர்கண்டு சகிக்கமுடியாத எதுவோ வந்திருக்கிறது. அதனால் அத்தகைய தைரியசாலிகள் கூட புத்திசிதறி வெறிபிடித்தவர்களாய் விட்டார்கள். என் சகோதரி இருதயம் பிளந்து இறந்தேபோனாள். மனிதருடைய எத்தகைய தந்திர சாமார்த்தியந்தான் இவ்வாறு செய்யும்? இல்லை யில்லை; இது பேயின் செய்கையே.

ஆனந்த:–இது, நீர் கூறுகிறபடி மனிதர் சம்பந்தமில்லாததா யிருந்தால், மனிதரால் கண்டுபிடிக்கக் கூடியதல்ல. ஆயினும், நாம் இயற்கைக் காரணத்தின்படி நம்மால் கூடிய ஆராய்ச்சிகளையெல்லாம் செய்து பார்ப்போம். அவற்றாலெல்லாம் முடியாவிட்டால் உமது உத்தேசத்தைக் கவனிப்போம். இம்மாதிரி சம்பவங்கள்-முதலில் இயற்கைக்கு விரோதமாகத் தோன்றப்படுகிறவைகள் சிலவற்றை நான் கண்டிருக்கிறேன். கடைசியில் அவை மனிதச்செயல்களாகவே முடிந்தன. உமது சகோதரர்களும் சகோதரியும் வேறாக வசிப்பதை நோக்க நீர் குடும்பத்தினின்றும் பிரிந்து விட்டிருக்கிறீரென்று கருதுகிறேன்.

தங்க:—"ஆம். அவையாவும் கழிந்துபோனவைகளாய் மறக்கப்பட்டாலும் சங்கதி யுண்மையே. எங்களுக்கொரு தகரச்சுரங்கம் இருந்தது. எங்கள் தந்தை யிறந்தபின் நாங்கள் அதை விற்றுவிட்டுப் பணத்தைப் பாகித்துக் கொண்டோம். அப்பாக விஷயத்தில் கொஞ்சம் சச்சரவு உண்டாயிற்று. நான் மட்டும் தனியே வசிக்கத் தீர்மானித்தேன். ஆனால் சீக்கிரத்தில் அந்த சொல்பமனஸ்தாபம் அடியோடு மறக்கப்பட்டு ஒருவருக்கொருவர் மன்னித்துக் கொண்டு

பழையபடியாய் விட்டு - யாவரும் அன்புள்ள சிநேகர் போலவே யிருந்தோம்" என்றான்.

ஆனந்த:—கடந்த இரவு நீ அங்கு அவர்களோடு போசனம் செய்துகொண் டிருந்தபோது நடந்த விஷயங்களில் அகோர சம்பவத்திற்குக் காரணமாகவாவது ஓர் உளவாகவாவது கருதத்தக்க அல்லது சந்தேகிக்கத்தக்க விஷய மேதாவது நேர்ந்ததாக நினைவிருக்கிறதா? நன்றாய்ச் சிந்தித்துப்பார். ஏனெனில் சொல்ப உளவகப்பட்டாலும் அது எனக்குப் பெரிய உதவிசெய்யும். உனக்கு மிக்க அல்பசங்கதியாய்த் தோன்றும்; அத்தகைய சங்கதியில்தான் உளவகப்படும். எவ்வளவு அற்பசங்கதியாயினும் சரி எதாவதிருந்தால் கூறு.

தங்க:—ஒன்றுமே யில்லை. ஒருசங்கதியும் நடக்கவில்லை.

ஆனந்த:—உனது சகோதரர்கள் மன உற்சாகத்தோடு - சந்தோஷத்தோடே யிருந்தார்களா?

தங்க:—ஆகா; பூரண சந்தோஷத்தோடேயே யிருந்தார்கள்.

ஆனந்த:—அவர்கள் மனதைரியமில்லாதவர்களோ? ஏதாவது அபாயம் வருமென்ற எண்ணத்தால் அச்சமுடையவர்களா யிருந்திருப்பார்களா? தங்களுக்குள்ள அனுபவத்தால் அதை யறிந்திருக்கலாகுமே.

தங்கவேல் பிள்ளை சற்றுநேரம் சிந்தித்து, "அப்படிப்பட்ட தொன்றுமே யில்லை" யென்றான்.

ஆனந்தலிங் "அப்படியாயின் நீ கூறுவதற்கு ஒன்றுமேயில்லை. அந்நேரம் அங்கிருந்த போது ஒரு சம்பவமும்-மிக்க அற்பமானது கூட-சற்று சாதாரணத்திற்கு மாறானது ஒன்றுமே நடக்கவில்லையா? ஒருவரும் எழுந்து வெளியில் செல்லவில்லையா? வெளியில் யாரேனும் நடப்பதாய்ச் சந்தடி முதலிய வற்றில் ஒன்றுமே இல்லையா?" என்றான்.

தங்க:—"இப்போது ஒரு சங்கதி கூறலாமென்று தோன்று

கிறது. நாங்கள் அறையில் உட்கார்ந்திருந்தபோது என் முதுகு சாளரத்தின் பக்கமிருந்தது. என் சகோதரன் ஜம்புசாமி என்எதிரில் சாளரத்தைப் பார்த்தாற் போல் உட்கார்ந்திருந்தான். கடித ஆட்டத்தில் அவன் என் பக்கமாதலால் எதிரில் உட்கார்ந்திருந்தான். அவன் ஒருதரம் என் தோளுக்கு மேல் வெளியில் உற்று நோக்கினன். ஆகையால் நானும் திரும்பிப் பார்த்தேன். சற்று தூரத்திலிருந்த செடிகள் நன்ருகத் தெரிந்தன-அங்கு ஏதோ ஒன்று நகர்வது போல் தோன்றியது. ஆனால் மனிதனென்றும் மிருகமென்றும் புலப்படவில்லை. எதுவோ ஒன்றிருப்பது மட்டும் தெரிந்தது. அது வரையில் நிச்சயம். நான் என் சகோதரனை அங்கென்ன பார்த்தாய் என்று கேட்டேன். அவனும் நான் கூறியது போலவே கூறினன். அவ்வளவே சங்கதி" என்ருன்.

ஆனந்த:—நீங்கள் அங்கு சென்று சோதித்துப் பார்க்கவில்லையோ?

தங்க:—இல்லை. அதை அநாவசியமென்று அப்போதே மறந்து விட்டோம்.

ஆனந்த :—அப்படியானல் நீ வரும்போது கெடுதியேதேனும் நேரிடுமென்ற எண்ணம் கொஞ்சங்கூட இல்லை யல்லவா?

தங்க :—"ஒன்றுமே யில்லை." என்ருன்.

ஆனந்த:—இவ்வளவு காலையில் உனக்கு இச்சங்கதி எப்படித் தெரிந்து விட்டதென்று எனக்கு விளங்கவில்லை.

தங்க:—நான் அதிகாலையில் எழுந்திருப்பவன். எழுந்ததே வெளியில் செல்வது வழக்கம். இன்று காலை நான் வெளியில் கொஞ்சதூரம் செல்லும்போது டாக்டரைச் சந்தித்தேன். அவர் - வண்டியில் போகிறவர் - என்னைக்

கண்டதும் "புது மாளிகையினுள் சமையற்காரி பொன்ஞச்சி அங்கேதோ ஆபத்தென்று என்னைத் தட்சணம் வரும்படி ஒரு சிறுவனை யனுப்பினுள்" என்று கூறினூர். நான் உடனே அவர் வண்டியில் ஏறிக்கொண்டேன்.

நாங்கள் வீட்டில் நுழைந்து அந்த அறையிற் பிரவேசித்தோம். அங்கிருந்த மெழுகுவத்திகளும், நெகிடித்தீயும் நெடுநேரத்திற்கு முன்பே அணைந்து போயினபோல் தோன்றின. அவர்கள் விடியுமட்டும் இருட்டிலேயே உட்கார்ந்திருக்கிறூர்கள் என்பது தெரிந்தது. பங்கஜம் இறந்து போய் ஆறுமணி நேரமாயிருக்குமென்று வைத்தியர் கூறினூர். எவ்வித காயமுமில்லை. அவள் முகத்தில் உண்டாயிருந்த அந்தப் பயங்காத் தோற்றம் தவிர, மற்றபடி அவள் நான் அங்கிருந்து திரும்பியபோது எப்படி எங்கு உட்கார்ந்திருந்தாளோ அப்படியே யிருக்கிறுள். சகோதார் இருவரும் வாயில் வந்தபடி பாடிக்கொண்டும் பல்லிளித்துக் கொண்டு மிருக்கிறூர்கள். அவர்களுக்கு உலக உணர்ச்சியே யில்லை. அய்யோ கடவுளே அது.! மிக்க கோரமான காட்சி. என்னுல் சகிக்க முடியவில்லை. வைத்தியர் முகம் வெளுத்துவிட்டது. அவர் ஒருவித மூர்ச்சை யடைந்தவராய் நாற்காலியில் சாய்ந்து விட்டார்" என்றூன்.

ஆனந்த:—"மிக்க ஆச்சரியம்! மிக்க அபூர்வமானதே" என்று கூறிக்கொண்டே எழுந்து சட்டையையும் தலையணியையும் அணிந்துகொண்டு "நாம் சற்றும் ஆலசியமின்றிப் புது மாளிகைக்கு உடனே செல்வது நலமென்று கருதுகிறேன். ஆரம்பத்தில் இதினும் அபூர்வமாகத் தோன்றிய விஷயத்தை நான் கண்டதேயில்லை என்று கூறுவேன்" என்றூன்.

2-வது அத்தியாயம்.

புது மாளிகைக்குச் செல்லும் மார்க்கம் ஒரு வளைந்த நெருக்கமான சந்தின் வழியே செல்கிறது. ஆனந்த ஸிங் முதலியவர்கள் அவ்வழியே செல்லும் போது, அக் கோர சம்பவம் நடந்த வீட்டின் திக்கிலிருந்து ஒரு கறுப்பு வண்டி இவர்களுக்கெதிரில் வந்து துரிதமாக இவர்களைத் தாண்டிச் சென்றது. அவ்வண்டியின் சாளரத்திலிருந்த திரை நீக்கப்பட்டதும் மிக்க கோர சொரூபமான ஒரு முகம் வெளியில் தோன்றியது. தங்கவேல் பிள்ளை அம் முகத்தைக் கண்டதும் முகவாட்டத்தோடு "அய்யோ கடவுளே! என் சகோதரர்களைப் பைத்தியக்கார வைத்தியசாலைக்குக் கொண்டு போகிறார்கள்" என்றான். இவர்கள் பயங்கரத்தோடு செல்லும் வண்டியை நோக்கினார்கள். கடைசியில் புதுமாளிகை யென்ற அவ்விடுபோய்ச் சேர்ந்தார்கள்.

அந்த வீடு பெரிய விசாலமான வீடு. அதைச்சேர்ந்த தோட்டம் மிகப் பெரிது. செடிகள் செழிப்பாக வளர்ந்திருந்தன. அந்த இடந்தான் அவர்கள் போசனம் செய்த அறையின் சாளரத்திற்கு எதிரிலிருந்தது. தங்கவேல் பிள்ளை கூறியபடி ஒரு ஸ்திரீ மாணமடையவும், இரண்டு ஆடவர் பைத்தியக்காராகவும் செய்த அப்பயங்கரமான உருவம் அங்கிருந்துதான் வந்திருக்க வேண்டும்.

அங்கு வரிசையாகப் பூத்தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. ஆனந்தஸிங் தாழ்வாரத்தில் பிரவேசிப்பதன் முன்னர் அப்பாதையில் ஏதோ சிந்தனையோடு மெதுவாய் உலவினான். ஆனந்தஸிங் அங்கிருந்த ஒரு தண்ணீர்த் தொட்டியருகில் கால் இடறியதால் அதை யுருட்டிவிட மற்றவர்கள் கால்களிலும் பாதையிலும் நீர் பாய்ந்து சென்றது. ஆனந்தஸிங் ஆழ்ந்த சிந்தனையி லிருந்ததால்

அதைக் கவனியாமல் நடக்கவே அப்படி நேர்ந்ததென்று விசுவநாதன் எண்ணிக் கொண்டான்.

இவர்கள் வீட்டிற்குள் சென்றபோது ஆனந்தஸிங், வீட்டில் சமையல்காரியும் காரியஸ்தியுமாகிய பொன்னுச்சியைக் கண்டு இரவு நடந்த சங்கதியைப்பற்றி விசாரித்தான். அவள் சற்றும் தடுமாற்றமின்றிப் பின் கண்டவாறு கூறினாள் :—

"ஐயா! என்னை யாதரித்து வந்த இவர்கள் மிக்க உத்தமர்கள். என்னைத் தாயார்போல் கவனித்து வந்தார்கள். அய்யோ! இரவு இவர்கள் அனைவரும் எவ்வளவோ சந்தோஷத்தோடு போஜனம் செய்து, பிறகு சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். என்றும் இவர்கள் அவ்வளவு சந்தோஷமாயிருந்ததில்லை. இரவு நான் படுத்ததே சவம்போல் நித்திரைபோய் விட்டேன். எனக்கு எள்ளளவு சந்தடியாவது, எவ்விதக் குழப்பமாவது கேட்கவில்லை. விடிந்த பின் நான் அவர்களிருக்கும் அறைக்குள் சென்று பார்த்ததே எனக்குண்டான பீதியாலும் திகில் கலவரம் முதலியவைகளாலும் நான் ஸ்மரணையிழந்து மூர்ச்சையடைந்து விட்டேன். எனக்கு ஸ்மரணை வந்ததும் எழுந்து ஓடிப்போய் வீதியில் கண்ட ஒரு குடியானச் சிறுவனிடம் சங்கதியைக் கூறி வைத்தியரை யழைத்து வரும்படி தூத்தினேன். பங்கஜம் அம்மாள் மேல்மாடியிலுள்ள அறையில் கிடத்தப்பட்டிருக்கிறார்கள். அந்தோ! எஜமானர் இருவரையும் நான்கு பேர் பிடித்துப்போய் வண்டியில் ஏற்றினார்கள். அய்யா! நான் இனி ஒருநாட்கூட இவ்வீட்டி லிருக்க முடியாது. இன்று மாலையே புறப்பட்டுச் சேந்தனூரிலிருக்கும் என் சுற்றத்தாரிடம் போய்ச் சேருகிறேன்" என்றாள்.

அதன்பிறகு ஆனந்தஸிங் முதலியவர்கள் சவம் இருக்கும் அறைக்குச் சென்று அதை நோக்கினார்கள். பங்கஜம்

மிக்க அழகுடைய மாதாகவே காணப்பட்டாள். இப்போது அவளுக்கு நடுவயதாய்விட்டாலும் நல்ல அழகியென்பது புலப்பட்டது. இறந்தபிறகும் அவள் முகத்தின் அழகு மாறவில்லை. அவள் கூந்தல் கரியமேகத்தைப் பழிக்கத்தக்கதாய்ச் செழித்து வளர்ந்திருந்தது. அவள் அவயவங்கள் ஒவ்வொன்றும் காண்போர் மனதைக் கவரத்தக்கவைகளாகவே யிருந்தன. இப்போது இறந்தபின் அவள் கண்களில் பயங்கரமான கோரம் தோன்றியிருந்தபோதிலும், அக்கண்கள் பரந்து நீண்டு, காணும் வாலிபர் மனதைக் கரைக்கக்கூடியவைகளாகவே புலப்பட்டன. இப்போது பங்கஜம் அவள் படுக்கை யறையில் கிடத்தப்பட்டிருக்கிறாள்.

அதைப் பார்த்தபின் இவர்கள் இக்கோர சம்பவம் நேர்ந்த அறைக்குச் சென்றார்கள். நெகிடித் தீயிருந்த குழியில் யாவும் எரிந்துபோய் வெறும் சாம்பலே யிருந்தது. மேஜையின்மேல் இருந்த மெழுக்குவத்திகள் அடிவரையில் எரிந்து அணைந்துபோய்க் கிடந்தன. அவர்கள் ஆடிக்கொண்டிருந்த சீட்டுகள் அப்படியே மேஜைமேல் இறைந்து கிடந்தன. நாற்காலிகள் சுவரோரத்தில் இழுக்கப்பட்டிருந்தன. மற்றயாவும் முன் இரவு இருந்தபடியே யிருந்தன.

ஆனந்தஸிங் மெதுவாய் அந்த அறையின் எல்லாப் பாகங்களிலும் சென்று பார்த்தான். அவன் அங்கிருந்த ஒவ்வொரு நாற்காலியையும் இழுத்து அவற்றைப் பல இடங்களில் பலவிதமாய்த் திருப்பிப்போட்டு உட்கார்ந்து உட்கார்ந்து பார்த்தான். அங்கிருந்து தோட்டத்தில் எவ்வளவு தூரம் வரையில் கண்களுக்குப் புலப்படும் என்று ஆராய்ச்சி செய்துபார்த்தான். தரை, மேல்கூரை, நெகிடித்தீ யிருக்குமிடம் யாவும் உன்னிப்பாய்ப் பார்த்தான். ஆனால் ஏதேனும் ஒரு உளவு அகப்பட்டால் அவன் கண்களில் உண்டாகும்

பிரகாசமும் முகத்தில் தோன்றும் மற்ற குறிகளும் ஒரு சமயத்தில்கூட ஆனந்தஸிங்கிடம் உண்டாகவில்லை யென்பதை விசுவநாதன்மட்டும் கவனித்தான்.

ஒருமுறைமட்டும் ஆனந்தஸிங் "இங்கு நெகிடித்தீயேன்? இக்காலத்தில் இச்சிறு அறையில் எப்போதும் தீவைத்திருப்பது வழக்கமோ?" என்று கேட்டான். அதற்குத் தங்கவேல் கடந்த இரவு மிக்க குளிராக விருந்ததென்றும், அதனால் தான் வந்தபிறகே நெகிடித்தீயை மூட்டினார்களென்றும் கூறிவிட்டு "ஆனந்தஸிங்! இப்போது என்ன செய்யப்போகிறாய்?" என்று வினவினான்.

ஆனந்தஸிங் புன்னகைபுரிந்து விசுவநாதன் தோள்மேல் கரத்தைவைத்து, "விசுவநாதம்! நீ அடிக்கடி அவ்வளவு நியாயமாய்க் கண்டித்த அப்புகையிலைப் பாஷாணத்தைப்பற்றி மறுபடி சம்பாஷிக்கலாமென்று கருதுகிறேன்-" என்று கூறிவிட்டுக் குருவையும் தங்கவேல் பிள்ளையையும் நோக்கி,

"நீங்கள் அனுமதி யளித்தால் நானும் என் நண்பரும் எங்கள் குடிசைக்குச் செல்கிறோம். இப்போது இந்த விடத்தில் புதிதாக எந்தச் சமாசாரமேனும் நமக்குக் கிடைக்குமென்று எனக்குப் புலப்படவில்லை. நான் வீட்டிற்குச் சென்றபின் யாவும் மறுபடி சிந்திக்கவேண்டும். ஏதேனும் எனக்கு விசேஷமான விஷயம் புலப்பட்டால் உடனே உங்களுக்கு அறிவிப்பேன். இதைப்பற்றிய கவலையினி என்னுடையது. இதற்கிடையில் நாங்கள் விடைபெற்றுக்கொண்டு செல்கிறோம்" என்றான்.

தங்கவேல் பிள்ளையும் ஞானரத்னம் குருவும் "இதையெப்படிக் கண்டுபிடிக்கவேண்டுமென்பது உனதுபொறுப்பு. இதைப்பற்றி நாங்கள் உனக்கு யோசனைகூறத் தக்கவர்களல்ல. அதற்கு மாறாக இவ்விஷயத்தில் உன் ஆலோ

சனைப்படி நடக்க வேண்டியவர்களாக விருக்கிறோம்" என்றார்கள்.

அதன் பிறகு கால்மணி நேரத்திற்குள் ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் அங்கிருந்து புறப்பட்டுத்தங்கள் இருப்பிடம் சேர்ந்தார்கள். ஆனந்தஸிங் கண்களைப் பாதிமூடியபடி பேசாமல் உட்கார்ந்திருந்தான். அவன் புருவங்கள் நெறிந்துகொண் டிருந்தமாதிரியால் அவன் ஆழ்ந்த யோசனையி லிருக்கிறானென்று விசுவநாதன் தெரிந்துகொண்டு ஒன்றும் பேசாமலிருந்தான். அந்த வீட்டில் ஆனந்தஸிங்குக்கு ஏதேனும் உளவு அகப்பட்டதா இல்லையா என்று விசுவநாதனுக்கு ஒன்றுமே புலப்படவில்லை.

ஆனந்தஸிங் நெடுநேரம் ஒரு பெரிய நாற்காலியில் சாய்ந்து கால்களை மடக்கிக்கொண்டு சுங்கானைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் நெற்றி நெளிந்துகொண்டிருந்தது. பார்வை எங்கோ தூரத்திலிருந்தது. புருவங்கள் மேலுக்கிழுக்கப்பட் டிருந்தன. இந்த நிலையில் ஒருவார்த்தைகூடப் பேசாமல் நெடுநேரம் இருந்தவன் கடைசியில் சுங்கானைத் தட்டென்று மேஜைமேல் வைத்துவிட்டு,

"விசுவநாதம்! இது உதவாது. நாம் பாறைகள் மேல் உலவிக்கொண்டே கல், அம்புகளுக்குத் தேடுவோம். இந்த விஷயத்தைப்பற்றி உளவு அகப்படுவதைவிட அக்கல் அம்புகள் பெரும்பாலும் அகப்படும். ஒருவித ஆதாரமுமில்லாமல் மூளைக்கு வேலை வைப்பது ஒரு எந்திரத்தை ஓயாமல் ஓட்டுவதாகும். கடைசியில் அது பொடிப்பொடியாய் உடைந்து போம். கடற்காற்று, நல்ல சூரியப்பிரகாசம், பொறுமை இவை யிருந்தால் மற்றவை யெல்லாம் தாமே வரும்" என்றான்.

பிறகு இருவரும் வீட்டை விட்டுப் புறப்பட்டுக் கட

லோரம் சென்று அங்குள்ள பாறையோரம் சேர்ந்தபோது ஆனந்தஸிங் "விசுவநாதம்! இப்போது நமது நிலைமை யெப்படி யிருக்கிறதென்று நிதானமாய்க் கவனிப்போம். தற்சமயம் கையில் சிக்கியிருப்பது சொல்பமாயினும் அதை யுறுதியாகப் பற்றிக்கொண் டிருந்தால் புது விஷயங்கள் கிடைக்கும்போது இதோடு பொருத்திக்கொள்ள அனுகூலமா யிருக்கும். முதலாவது மனிதரால் நடக்கக்கூடிய விவகாரம் பேயால் பிசாசால் நடந்தது என்ற யோசனையை யடியோடு விட்டுவிடுவோம். அதையடியோடு நம் மனதிலிருந்து நீக்கிவிட்டு விவகாரத்தைத் தொடங்குவோம். ஏதோ ஒரு அபூர்வச் செய்கையால் மூன்று பேருக்கு ஆபத்து நேர்ந்திருக்கிறது. இந்தச் சம்பவம் எப்போது நடந்தது? நாம் கேள்விப்பட்ட யாவும் உண்மையாயின் தங்கவேல் பிள்ளை அந்த வீட்டிலிருந்து திரும்பி வந்து விட்ட வுடனே நேர்ந்திருக்கவேண்டும். இது ஒரு மிக்க முக்கியமான விஷயம். தங்கவேல் பிள்ளை வந்துவிட்ட சில நிமிடங்களுக்குப் பின் நடந்திருக்க வேண்டுமென்று உத்தேசிக்கலாம். அவர்கள் ஆடிக் கொண்டிருந்த கடிதங்கள் இன்னும் அங்கேயே கிடக்கின்றன. அவர்கள் வழக்கமாய் நித்திரைக்குச் செல்லும் வேளை முன்னமே கழிந்து நெடுநேரமாய் விட்டது. அப்படியிருந்தும் அவர்கள் தங்கள் இடங்களை விட்டுப் பெயரவுமில்லை, நாற்காலிகளைக் கூடப் பின்னுக்குத் தள்ளவில்லை. நான் மறுபடி கூறுகிறேன்; அச்சம்பவம் தங்கவேல் பிள்ளை சென்றவுடனே, பதினொரு மணிக்கு முன்பே நேர்ந்தது.

இப்போது நமக்குள்ள இரண்டாவது படி என்னவெனில் நம்மால் கூடியவரையில் தங்கவேல் அவர்களை விட்டுப் பிரிந்தபின் சென்ற வழியையும் செய்த காரியங்களையும் கவனிக்க வேண்டியதே யாகும். இதில் கஷ்டம்

ஒன்றும் காணோம். ஒரு சந்தேகமும் தோன்றுவதாயில்லை. என்னுடைய மார்க்கங்கள் உனக்குத் தெரிந்தேயிருக்கின்றன. நாம் பூஞ்சட்டிகளருகில் செல்லும்போது தண்ணீர்த் தொட்டியை வேணுமென்றே உருட்டிவிட்டேனென்பதை நீ யறிந்துகொண்டிருப்பாய். தங்கவேல் பிள்ளையின் காலடியைத் திட்டமாயறிய அதைவிட வேறு இரகசியமான மார்க்கமில்லை. ஜலம் வீழ்ந்ததே மணல் கலந்த அப்பாதையில் அவன் காலடி அப்படியே சரியாய்ப் பதிந்துவிட்டது. கடந்த இரவும் மழை தூறியது. ஆகையால் அவன் காலடியின் மாதிரியை யறிந்துகொண்ட பின் அவன் அங்கிருந்து திரும்பிச் சென்றபோது எவ்வழி எங்கு சென்றானென்பதைக் காலடிகளால் கண்டறிவது கஷ்டமல்ல. அவன் துரிதமாய்க் குருவின் வீட்டை நோக்கிச் சென்றான் என்று தெரிகிறது.

இப்போது தங்கவேல் பிள்ளை அவர்களை விட்டுப் போய்விட்ட பின் யாரோ அன்னியன் ஒருவன் வந்து கடிதமாடிக்கொண்டிருந்தவர்களுக்கு வெறும் பயத்தாலேயே அத்தகைய ஆபத்து நேரிடும்படி செய்திருந்தால் அவன் யார் என்றும் எப்படி யவ்வாறு செய்தானென்றும் நாம் எவ்வழியாய் ஊகிப்பது, அல்லது அறிவது? பொன்னுச்சியை விசாரித்தோம். அவள் குற்றமற்றவளென்பது புலப்படுகிறது. யாரேனும் தோட்டத்தின் வழியாகச் சாளரத்தினருகில் வந்து இரண்டு ஆடவர் உடனே புத்தியையிழந்து விடவும் ஒரு ஸ்திரீ மடியவும் கூடிய அத்தகைய ஏதோ வொரு காரியத்தைச் செய்திருப்பானு-அப்படி நடந்திருக்கும் என்று கருத ஏதேனும் அத்தாட்சி யிருக்கிறதா?

தங்கவேல் பிள்ளையே தன் சகோதரன் செடிகளில் ஏதோ ஒன்று நகர்வது போல் கண்டதாகக் கூறினன்.

இரவு இருந்த மழையையும், மேகத்தையும், இருளையும் நோக்க அவ்வாறு கண்டார்களென்பது வியப்பாகவேயிருக்கிறது. அங்கிருப்பவர்களைப் பயப்படுத்த வேண்டுமென்று எவனேனும் கருதியிருந்தால் அவன் அவர்கள் தன்னைக் காணுமுன்பே திடீலென்று சாளரத்தின் கண்ணாடியில் முகத்தைமட்டும் காட்டுவான். சாளரத்தின் ஓரத்தில் வெளியில் மூன்றடிப்பாதை புஷ்பச் செடிகளுக்கிடையிலிருக்கிறது. அதில் எவ்விதக் காலடியுமில்லை. இதனுல் வெளி மனிதன் எவனேனும் அவர்களுக்கு அத்தகைய பீதியையுண்டாக்கியிருப்பானென்று ஊகிக்கக்கூடவில்லை. அத்தகைய விபரீதச்செயலைச் செய்வதற்கு யாருக்கேனும் காரணமிருக்குமாவென்று சிந்தித்தால் அதுவும் விளங்கவில்லை. இப்போது விசுவநாதம்! நமக்கு இதிலிருக்கும் கஷ்டங்கள் எத்தகையன வென்று தெரிகின்றனவல்லவா?” என்றான்.

விசுவ:—பட்டப்பகற்போல் நன்ருய்த் தெரிகின்றன.

ஆனந்த:—“அப்படியிருந்தாலும் இன்னும் கொஞ்சம் பிடிப்புமட்டு மகப்பட்டால் இது முடியாத காரியமல்ல வென்று நான் நிரூபிப்பேன். ஒரு பெரிய கட்டிடத்தில் இதைப்போலவே இருளாகப் புலப்படும் சில மூலைகளிருக்கலாம். ஒரு சமயம் தீபவொளியோ பகல் வெளிச்சமோ அப்பக்கம் திரும்பும்போது அந்த இருள் நீங்கிவிடும். அவ்வாறே இவ்விஷயத்தில் இருக்கும் இருளில் கொஞ்சம் வெளிச்சம் தாக்குமட்டும் இதை நம்மனதைவிட்டு வெளியில் வைத்துவிட்டு இந்தப் பிரதேசத்தில் வசித்துவந்த பூர்வ ஜனங்களைப்பற்றிய அறிகுறிகளை யாராய்ச்சி செய்வோம்” என்றான்.

ஆனந்தஸிங்கிடம் இன்னொரு சாமார்த்தியமுண்டு. அது மனப்பயிற்சியால் உண்டானதே. அதென்னவெனில்

அவன் ஒரு விஷயத்தை மனதைவிட்டு நீக்கி வைக்கவேண்டும் என்று கருதினுல் கட்டாயம் தட்சணம் அப்படியே செய்வான். அவன் விஷயங்களைக் கேட்போரே தம்மனத்தினின்றும் விலக்குவதென்றால் அது சாத்தியப்படாது. அத்தகைய் விவகாரத்தை யவன் உடனே தட்டென்று விலக்கிவிட்டு வேறு விஷயத்தில் மனதைச் செலுத்துவான். இச் சங்கதி விசுவநாதன் அறிவான். ஆயினும் அன்று காலை அத்தகைய விஷயத்தைச் சுமார் இரண்டுமணி நேரத்திற் கதிகமாய் அடியோடு விட்டு வேறு விஷயங்களைப்பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தது விசுவநாதனுக்கே பெரும் வியப்பை யுண்டாக்கிவிட்டது.

இருவரும் நெடுநேரம் பாறைகளிலும் அங்கிருந்த குகைகளிலும் திரிந்துகொண் டிருந்துவிட்டுக் கடைசியில் பகல் ஒருமணிக்குமேல் வீட்டிற்குத் திரும்பினுர்கள். இவர்கள் உள்ளே நுழைந்தபிறகு அகோசம்பவத்தை நினைப்பூட்டத்தக்க சம்பவம் நேர்ந்தது. வீட்டில் ஒரு ஆள் வந்து இவர்கள் வருகைக்காக எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். அந்த ஆள் மிக்க உயரமும் பிரம்மாண்டமான உருவமும் சுருண்டு செழித்து வளர்ந்த சிகையும் நீண்டமிசையும், இராஜாளியின் கண்களைப்போன்ற பயங்கரமான தீட்சணப் பார்வையுடைய கண்களும், நீண்ட கருத்த தாடியுமுடையவன். அவன் பார்வைக்கு எவரும் திடுக்கிடும்படியான பயங்கரசொரூபமுடையவனே. ஆனுல் அவ்வுருவத்தைக் கண்டதே அவன் யாரென்று இவர்கள் அறிந்துகொண்டார்கள். அவன் பிரசித்திபெற்ற சிங்க வேட்டைக்காரன். அதோடு இதுகாறும் மனிதரால் கண்டறியப்படாத மலையுச்சி குகை நதியின் உற்பத்தியிடம் இத்தகையவைகளைக் கண்டுபிடிப்பதில் மிக்க உற்சாகமுடையவன். அவன் பெயர் டாக்டர் சொக்கநாதன்.

அவன் எப்போதும் ஜனசஞ்சாரமில்லாத ஒரு அடவியிலுள்ள தன் வீட்டில் ஏகாந்தமாய் இருக்கப் பிரியமுடையவன். நெடுநேரம் நிர்ச்சங்கமாயிருப்பதில் அவனுக்கு மிக்க விருப்பம். அதனுல் அவன் இவர்கள் வந்ததைக்கண்டு ஆவலோடு ஒன்றும் பேசவில்லை. உட்கார்ந்த இடத்தை விட்டு நகரவுமில்லை. அவனுடைய சுபாவ குணத்தையறிந்த இவர்களும் சட்டென்று உடனே அவனிடம் சம்பாஷிக்க முயலவில்லை. அவன் தன் வீட்டில்கூட எப்போதும் அடவிகள் மலைகள் முதலியவற்றின் படங்களை வைத்துக் கொண்டு தன் வேட்டை விவகாரங்கள் முதலியவற்றைக் கவனித்துக்கொண் டிருப்பானேயன்றி அன்னியர் விவகாரங்களைச் சற்றும் கவனிப்பவனேயல்ல.

இவர்களிருவரும் அறைக்குள் சென்று உட்கார்ந்தபின் டாக்டர் சொக்கநாதன் ஆனந்தலிங்கை நோக்கி "இந்த அபூர்வசங்கதியைப்பற்றி ஏதேனும் கண்டறிய முயல்வதில் அனுகூலம் அடைந்தாயோ?" என்று கொஞ்சம் ஆவலோடு வினவினுன். அத்தகைய மனிதன் இதைப்பற்றிக் கேட்டது விசுவநாதனுக்குச் சொல்லொணு அதிசயமாகத் தோன்றியது.

அவன் அவ்வாறு கேட்டுவிட்டு ஆனந்தலிங்குக்கு விடையளிக்க அவகாச மளிக்காமலே பேசத்தொடங்கி "நாட்டிலுள்ள போலீஸார் அடியோடு தவருனவழியில் செல்கிருர்கள். இவ்விஷயங்களில் அகன்ற அனுபோகமுடைய உன் புத்திக்குப் பொருத்தமான உத்தேசம் ஏதேனும் கிடைத்திருக்கலாகுமென்பதே என் எண்ணம். நான் இவ்விஷயத்தைப்பற்றி உன்னிடம் கலந்து பேச விரும்பியதற்குக் காரணமென்னவெனில், நான் பன்முறைகள் இப்பிரதேசத்தில் வந்திருந்தபோது இக்குடும்பத்தாரை நன்ருய் அறிவேன். மேலும் என்தாய் இந்த நாட்டாள்.

அவள் வழியில் இவர்கள் எனக்குச் சுற்றத்தாராகவே யிருக்கலாகும். இதனால் இவர்களுக்கு நேர்ந்த மிக்க துக்ககரமான ஆபத்தைக் கேட்டதும் என் மனதிற்கு மிக்க வியாகூலமுண்டாயிற்று. உண்மையில் நான் சிங்கவேட்டைக்காக ஆப்ரிகாவிற்குச் செல்லப் புறப்பட்டுப் பாலூர்த் துறைமுகம் போய்ச் சேர்ந்துவிட்டேன். இன்று காலையில்தான் எனக்கு இச்சங்கதி எட்டிற்று. நான் உடனே திரும்பி ஷோய் இங்குவந்தேன். இவ்விஷயத்தில் நம்மாலான உதவியைச் செய்வோமென்பது என்கருத்து" என்றான்.

யாவும் கேட்டதே ஆனந்தஸிங்கின் கண்களில் ஒரு விதப் பிரகாச முண்டாயிற்று. அவன் நிமிர்ந்து நோக்கி "இதனால் உமது கப்பல் தவறிவிட்டதோ?" என்றான்.

சோக்கநாதன்:—நான் வேறொன்றில் செல்வேன்.

ஆனந்த:—ஆ பேஷ். இதுதான் சரியான உண்மைச் சினேகம் என்பது.

சோக்க:—அவர்கள் என் சுற்றத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறினேனே.

ஆனந்த:—ஆம் ஆம். உமது தாயார் கால்வழியில்-சாமான்களை யெல்லாம் கப்பலில் ஏற்றிவிட்டீரோ?

சோக்க:—சிலவற்றை மட்டுமே ஏற்றிவிட்டேன். மற்ற பெரும்பாகம் ஹோட்டலில் இருக்கிறது.

ஆனந்த:—உண்மையில் இச்சங்கதி இதற்குள் காலைப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதென்று நினைக்கிறேன்.

சோக்க:—இல்லை [illegible] எனக்குத் தந்தி வந்தது.

ஆனந்த:—"ஆ! அப்படியோ. உமக்கு யார் தந்திகொடுத்தார்களோ?" என்று கேட்டான்.

இக்கேள்வியைக் கேட்டதே சொக்கநாதன் முகத்தில்

186508 600 008

ஆனந்தபோதினி

(இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000 இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொருவருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0

வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.